www.panmugam.com

# பன்முகம்.com

மே - 2026 மலர்-2 இதழ்-5

24 மணிநேரமும் கேளுங்கள்




விருப்ப சந்தா ரூ.50 செலுத்த ஸ்கேன் செய்யவும்

MS PADMA MEDIA HOUSE



# நிலவில் ப்ளாட் ரெடி

## 13,331,000 டாலருக்கு விற்பனை செய்து சாதனை

www.panmugam.com
# பன்முகம்
மலர்-1 இதழ்-12 .com



## உங்கள் படைப்புகளை அனுப்பிவிட்டீர்களா?
## ஏப்ரல் 2026

## பன்முகம் பல்சுவை மாத இதழ்

| | | |
|---|---|---|
| கவிதைகள் | 15 வரிகளுக்கு மிகாமல் | சிறந்த 3 கவிதைகளுக்கு தலா ரூ100 பரிசு |
| சிறுகதைகள் | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | சிறந்த கதைக்கு ரூ500 பரிசு. |
| கேள்விகள் | எதைப் பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். | சிறந்த கேள்விக்கு ரூ100 பரிசு. |
| கட்டுரை | 1200வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| திரை அனுபவம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |
| நூல் அறிமுகம் | 300வார்த்தைகளுக்கு மிகாமல் | |

அனுப்பவேண்டிய முகவரி
tamilnaduepaper@gmail.com

கடைசிநாள்
**20.05.2026**

தொடர்புக்கு
**9337501889**

**படைப்புகளை அனுப்பும்போது உங்கள் பெயரையும், அலைபேசி எண்ணையும் தவறாமல் படைப்புக்குக் கீழ் குறிப்பிடவும்**

**அச்சு இதழ் ஆண்டு சந்தா Rs.800**
**மின்னிதழ் ஆண்டு சந்தா Rs.300**
**G-pay 9337501889**

# சிரிங்க பாஸ்...

தொலைபேசியில் ஒரு பதற்றமான குரல்..

"டேய் மச்சான்... எங்கடா இருக்க?"

"வீட்லதான்டா இருக்கேன்..."

"அப்பாடா... இப்பதான்டா நிம்மதியா இருக்கு!"

"ஏன்டா? என்ன விஷயம்??"

"அதில்லடா.....

காலையில பேப்பரை பார்த்தேன். அதுல, உங்க தெருவுல வெட்டியா சுத்திகிட்டிருந்த நாய்களை எல்லாம் கார்பரேசன்காரங்க புடிச்சுட்டு போனதா செய்தி போட்டிருந்துச்சு.

அதான்... எங்க நீ மாட்டிகிட்டீயோன்னு பயந்தே போயிட்டேன்....."

●●●

அம்மா: என்னடி உன் புருஷன் தினமும் இப்படி குடிச்சுட்டு வராரே

நல்லாவா இருக்கு.?

மகள் : தெரியலை அம்மா நான் இன்னும் டேஸ்ட் பண்ணி பார்க்கலை!

●●●

நீ என் தங்கக் குட்டியாம் தாத்தா சொல்றதைக் கேப்பியாம்

நான் உன் புத்தகப் பையைத் தூக்கிட்டு வருவேனாம். பாப்பா நடந்து வருவியாம்.

வேண்டாம் தாத்தா என் பையைத் தூக்கி நீ கஷ்டப்பட வேணாம். நானே என் பையைத் தூக்கிக்கிறேன். நீ என்னைத் தூக்கிக்கிட்டு வந்தாப் போதும்.

●●●

“ஏன் ஸ்கூட்டரை திருடினே?”

“டிராபிக் போலீஸ்காரர்தாங்க சீக்கிரம் வண்டிய எடு, வண்டிய எடுன்னு அவசரப்படுத்தினாரு எசமான்..!”

●●●

பகல்ல உங்களுக்குக் கண் தெரியாதா டாக்டர்?”

“தெரியுமே ஏன் கேட்கறீங்க..?”

“இல்லபார்வை நேரம் மாலை ஆறிலிருந்து எட்டுவரைன்னு போர்டு

வெச்சிருக்கீங்களே அதான் கேட்டேன்.!”

●●●

முதலாளி: டேய் முனியா, நான் கொஞ்சம் வீட்டுக்குப்போய் ஓய்வு

எடுத்துக்கிட்டு வர்றேன் நீ

கடையைப் பார்த்துக்க

முனியன்:உங்களுக்கு எதுக்கு சிரமம் முதலாளி? நானே போய் ஓய்வை — எடுத்துக்கிட்டு வந்துடறேனே!

●●●







# ஜோடியாக சேர்ந்து செய்த கண்டுபிடிப்பு

கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்... ஒரு பழைய பாழடைந்த கொட்டகை. உள்ளே மூச்சு முட்டும் நெடி.

இரண்டு மனிதர்கள் 8 டன் எடையுள்ள பாறைத் துகள்களை மாபெரும் கொப்பரைகளில் போட்டு நான்கு ஆண்டுகளாகக் காய்ச்சிக்கொண்டிருக் கிறார்கள்.

கை வலிக்கிறது, உடல் சோர்கிறது, ஆனால் அவர்களின் கண்கள் மட்டும் இலக்கை நோக் கியே இருக்கின்றன!

யார் அந்த இருவர்?

அப்படி அவர்கள் என்னதான் செய்து கொண் டிருந்தார்கள் என்கிறீர்களா..?

அவர்கள்தான்..

அறிவியல் உலகின் 'பவர் கப்புள்' மேரி கியூரி மற்றும் பியர் கியூரி!

சரியாக சொல்வதானால் 124 ஆண்டுகளுக்கு முன்னால் (ஏப்ரல் 20, 1902), அந்த அதிசயத்தை அவர்கள் நிகழ்த்திக் காட்டி உலகப் புகழடைந் தார்கள்.

ஆம், அறிவியல் உலகில் ஏப்ரல் 20, ஒரு வர லாற்று சிறப்பு மிக்க நாள்.

மனைவியும் கணவனும் சேர்ந்து ஆரய்ச்சி செய்து பல டன் எடையுள்ள 'பிட்ச்பிளெண்ட்' (Pitchblende) எனும் தாதுவை இரவு பகலாகக் காய்ச்சி, வடிகட்டி;

கடைசியாக அதிலிருந்து ரேடியம் குளோரைடு (Radium Chloride) என்னும் வேதியல் சேர்மத்தை (RaCl2 உப்பு) வெற்றிகரமாகத் தனிமைப்படுத்தினர்.



இது அறிவியல் உலகில் ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியது.

பல டன் தாதுக்களைப் பிழிந்து எடுத்ததில், அவர்கள் கையில் கடைசியாகக் கிடைத்தது வெறும் 0.1 கிராம் எடையுள்ள ரேடியம் குளோரைடு தான்.

0.1 கிராம் என்பது வெறும் ஒரு சிட்டிகை அளவுதான்!

ஆனால், அந்த ஒரு சிட்டிகைதான் பின்னாளில் புற்றுநோயைக் குணப்படுத்தும் சிகிச்சைக்கு (Radiotherapy) வழிகாட்டியது.

அந்த கண்டுபிடிப்புதான் அறிவியல் உலகில் மேரி கியூரியை இரண்டு முறை நோபல் பரிசுகள் வெல்ல வைத்தது.

ஏன் இவர்கள் இதைத் தனிமைப்படுத்த இவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள இதன் தன்மைகளைப் பார்ப்போம்.

இது ஒரு வெள்ளை நிறப் படிகத் தூள் (Crystalline powder). ஆனால், இதன் ஒரு விந்தையான குணம் என்னவென்றால், இருட்டில் இது நீல நிறத்தில் சுயமாக ஒளிரும் (Luminescence) தன்மையுடையது.

மேரி கியூரி முதன்முதலில் இதைப் பார்த்தபோது "நிலவொளியைப் போன்ற நீல ஒளி" என்று வர்ணித்தார்.

ஏன் இது மிக முக்கியமானது? தெரியுமா

ரேடியத்தை அதன் தாதுவிலிருந்து நேரடியாகத் தூய உலோகமாகப் பிரிப்பது கடினம். எனவே, கியூரி தம்பதியினர் அதை முதலில் ரேடியம் குளோரைடாகத்தான் பிரித்தெடுத்தார்கள்.

இதுவே உலகின் முதல் கதிரியக்கத் தனிமப் பிரிப்பு முறையாகும்.

இது ஒரு வலிமையான கதிரியக்கப் பொருள். இதிலிருந்து வெளிப்படும் கதிர்கள் அணுக்கருவியலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தன.





தொடக்க காலத்தில், புற்றுநோய் செல்களை அழிக்கத் தேவையான 'ரேடான் வாயுவை' (Radon gas) உருவாக்க இது ஒரு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டது.

ஒரு காலத்தில் கடிகார முட்கள் மற்றும் விமானக் கருவிகளில் இருட்டில் மின்னும் பூச்சாக இதைப் பயன்படுத்தினார்கள் (பின்னர் இதன் கதிர்வீச்சு ஆபத்து தெரிந்தவுடன் இது நிறுத்தப்பட்டது).

ரேடியம் குளோரைடு காற்றில் பட்டால் அதன் நிறம் மெதுவாக மஞ்சள் அல்லது ஊதா நிறமாக மாறும்.

இதற்குக் காரணம் அதில் உள்ள கதிரியக்கம் காற்றிலுள்ள நைட்ரஜனைத் தாக்குவது தான்!

சுருக்கமாகச் சொன்னால், இது இருட்டில் மின்னும் ஒரு ஆபத்தான, ஆனால் மருத்துவ உலகிற்குப் புதிய பாதையைக் காட்டிய ஒரு "அதிசய உப்பு".

இதில் ஒரு சுவாரசியம் என்ன தெரியுமா?

இந்தக் கண்டுபிடிப்புக்காக அவர்கள் உலகப் பெரும் செல்வந்தர்களாகி இருக்கலாம்.

ஆனால் அவர்கள், "அறிவியல் என்பது உலகத்திற்குச் சொந்தமானது" என்று சொல்லி ஒரு பைசா கூட ராயல்டி வாங்காமல் மக்கள் நலனுக்காக அர்ப்பணித்தார்கள்.

இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால்.

அவர்கள் அன்று பயன்படுத்திய டைரி மற்றும் குறிப்பேடுகள் இன்றும் கதிரியக்கத் தன்மையோடு (Radioactive) இருக்கின்றனவாம்.

அவற்றை ஈயப் பெட்டிகளில் (Lead boxes) வைத்துப் பாதுகாத்து வருகிறார்கள்.

மேலும், அவற்றைத் தொட வேண்டுமென்றால் இன்றும் பாதுகாப்புக் கவசங்கள் அணிந்துதான் செல்ல வேண்டுமாம்!

காரணம் ரேடியம்226 இன் அரைவாழ்க்கை ~1600 ஆண்டுகள் என்பதால் இன்னும் பல நூற்றாண்டுகள் வரை இருக்கும் என்பதால்.

இந்த கியூரி தம்பதியரின் அயராத உழைப்பிற்கும் தியாகத்திற்கும் நாம் என்றும் நன்றிக் கடன் பட்டவர்கள். நம்மால் என்றும் போற்றப்பட



# பயன்தரும் சமையலறை செய்திகள்

மழை மற்றும் குளிர் காலங்களில் தயிர் உறையாது. உறையூற்றும் போது பாலைச் சற்று சூடாக்கி ஊற்றி ஒரு பாத்திரத்தையும் கவிழ்த்து மூடிவிட்டால் விரைவில் உறைந்துவிடும்.

●●●

டீ போடும்போது, டீத்தூளுடன் சர்க்கரையை சேர்த்து கொதிக்க விடாதீர்கள் டீயின் சுவை குறைந்துவிடும்.

●●●

கீரை மசியல் செய்ய கீரையை கடையும் போது அதனுடன் கால் டீஸ்பூன் சர்க்கரையை சேர்த்து கடைய கீரை தனிசுவையுடன் இருக்கும்.

●●●

இரண்டு மிளகு, அரை டீஸ்பூன் தனியா தூளை தேநீர் கொதித்து வரும்போது தூவி இறக்கி வடிகட்டி சர்க்கரை கலந்து சாப்பிட்டால் உடலுக்கு ஊட்டச்சத்து கிடைக்கும். களைப்பு நீங்கும்.

●●●

உடல் எடை குறைந்தவர்கள் வாழைப்பழம் தினமும் இரவில் சாப்பிட்டு வந்தால் எடை கூடும்.

●●●

துவரம் பருப்பு துவையல் தயார் செய்யும்போது, சிறிது கொள்ளினையும் வறுத்து சேர்த்து அரைத்தால் சுவையும் மணமும் கூடுதலாக இருக்கும். உடலுக்கு நல்லது.

●●●

பஜ்ஜி மாவில் நாலைந்து பூண்டு பற்களை அரைத்தும், ஒரு டீஸ்பூன் சீரகத்தைப் பொடித்து போட்டு பஜ்ஜி செய்தால், பஜ்ஜி நல்ல சுவையுடனும் இருக்கும். கடலை மாவினால் வரும் வாயு தொல்லைகள் ஏற்படாமல் தடுக்கலாம்.

●●●

ஓவனில் இருந்து பாத்திரத்தை வெறும் கைகளால் எடுக்கக்கூடாது. க்ளவுஸ் அல்லது பிடித் துணியை பிடித்து தான் எடுக்க வேண்டும். ஓவனில் அலைகள் அதிகமாக இருக்கும். கை சிறிது தவறினாலும் காயம் ஏற்படலாம்.

●●●

அடிக்கடி உபயோகப்படுத்தும் எவர்சில்வர் டீ வடிகட்டி அடைத்துக் கொண்டு இருந்தால், அதனை சில நிமிடங்கள் நெருப்பில் காட்டிய பிறகு கழுவி விட்டால் அடைப்பு நீங்கி பளிச்சென்று இருக்கும்.

●●●

காலை உணவிற்கு முன் தினமும் ஒரு தக்காளி சாப்பிட்டு வரவேண்டும். 34 மாதங்களுக்கு தொடர்ந்து இதை செய்தால் உடல் எடை குறையும்.

– A s Govinda rajan

# ஈர நிலம்...

அள்ளி வழங்குவதற்கே...
உழைக்கும் யாவும்...
துள்ளி விளையாடும் மகிழ்ச்சியே...
வாழ்க்கை எங்கும்....
பொன்னு ம் பொருளும்...
சேமிப்பதற்கு அல்ல...
வறுமையின் துயர் துடைப்பதற்கே...
வறியோரின் தேவைகள்...தீர்ப்பதற்கே..
பசிப்பிணி போக்குதல்...பரம இன்பம்..
கொடையளித்து வாழ்தலே....
கோடி புண்ணியம்...
சத்துணவு வழங்கிய சாயாத கோபுரமே
கிராம நிர்வாகத்தை சீரமைத்த...சிகரமே..
மண்சோறு உண்டவர்களுக்கு...
சத்துணவு..
பசியோடு வந்தவர்களுக்கு..நளபாகம்
ஆதரவற்றோரக்கு அன்னமிட்ட கை
இருளில் வாழ்ந்தோரின் ஒளிவிளக்கு
திருடர்கள்...தீய சக்திகளை...
நிர்மூலமாக்கிய....அரசகட்டளை..
வாழ்ந்து நலிந்தோர்க்கு நம்பிக்கை
ஊட்டிய...
நாடோடி மன்னன்..
கடல் அளவு மனம் திறந்த...மீனவ
நண்பன்...
ஏழைகள்..ஏதிலிகள்
கவலை கண்ணீர்..கரை சேர்த்த...
படகோட்டி...
எங்கள் நெஞ்சில் நீங.. மன்னாதி
மன்னன்..
தொடர் வெற்றிகளை க் குவித்த...
எங்கள் சந்திரோதயம்....
அஇஅதிமுக எனும் மக்கள் இயக்கத்தை...
பிரசவித்த... கன்னித் தாய்
நினைவில் நெஞ்சம் நெகிழ்கிறோம்...

– தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி

# நட்பு

நண்பர்கள் பற்றி ஒரு பழமொழி உண்டு உன் நண்பனைக் காட்டு உன்னைச் சொல்கிறேன் என்று.

இதனாலேயே நான் தேடி தேடி எவரும் உயிர்த்தோழியாய் என் வாழ்நாட்கள் ஆரம்பம் முதல் இன்றுவரை வரவே இல்லை போலும்

கல்யாணம் ஆன பின்பு இவரிடத்தில் நான் கற்றுக்கொண்டது பகைமை வேண்டாம் நட்பு களைப் பற்றி ரொம்ப ஆராயாதே என்பது இது சரியாகப் பட்டதால் இப்பவும் யாரிடமும் பகை கிடையாதே தவிர உற்ற தோழி என யாரும் இல்லை

என் மகனிடமிருந்து கற்றது எல்லாருமே நல்லவர்கள் தான் ஏன் அவரைப் போல மாறிடு வேன் என்று பயப்படுகிறாய் உன்னைப் போல் அவரை மாற்றேன் என்பதை

ஆஹா இதுவும் நன்றாக உள்ளதே எனத் தோன்றியது

எனவே வள்ளுவர் நட்பு பற்றி கூறிய பண்பு கள் கண்டு வியந்து போனவள் வாழ்க்கை அனு பவத்தில் வேறுபடுகிறதே என்றும் தோன்றியது

நட்பு போல அருமையான செயல் எதுவுமில் லை அதனைப் பாதுகாக்கவும் எதுவுமில்லை

நல்ல தன்மையோடு கொண்ட நட்பு வளர் பிறை போல் வளரும் பேதையின் நட்பு தேய்பிறை போலத் தேயும்

படிக்க படிக்க இனிமை தரும் நூலைப் போன்றது பண்பு உடையவர்களின் நட்பு

பழகபழக மேன்மேலும் இன்பம் தருவதாகும்

சிரித்து மகிழ்வதற்காக மட்டும் அன்று நட்பு அவர் மிகுதியாக தவறு செய்யும்போது அவரைக் கண்டித்தும் திருத்துவதாகும் நல்ல நட்பு

பேசி பழகுதல் நட்பிற்குத் தேவையில்லை ஒத்த உணர்வுகளே நட்பு என்னும் உரிமையைத் தந்துவிடும்

முகத்தில் மகிழ்வை வரவழைத்து உள்ளம் கலக்காமல் செய்வது அல்ல நட்பு நட்பு உள்ள மகிழ்வோடு நட்புக் கொள்ளுதலே நல்ல நட்பு

அழிவிலிருந்து நட்பைக் காப்பாற்ற முற்பட் டுத் தன்னையும் மீறிய அழிவின் போதும் தானும் அவரோடு இருத்தலே நல்ல நட்பாகும்

மன வேறுபாடு இல்லாமல் முடிந்த இட மெல்லாம் இணைந்து நின்று காத்துப்பேணும் நிலையே நட்பு அதுவே நிலையாக தங்கி இருக்கும் இடமாகும்





ஒரு நட்பின் அளவை அது சிறப்பாக இருப்பினும் எடுத்துக் கூறினால் அந்த நட்பு தன் சிறப்பை இழந்துவிடும் எத்தனை சிறப்பு இதற்கு

நட்பு என்பது குழந்தைப்பருவம் முதல் ஆரம் பிக்கிறது

என் நண்பன் தோழி என்று சொல்வதில் மிகப் பெருமை

நிறைய நேரங்களை அவர்களுடன் கழிக்க விரும்பும் பருவம்

ஏன் இரவு வருகிறது இப்போது பிரிய வேண்டுமே என்ற ஏக்கத்தைக் கொடுப்பது

நட்பு கொண்டபின் யார் திட்டினாலும் காதில் வாங்குவதில்லை

ஆனால் எத்தனை பேருக்கு இந்த பால்ய நட்பு தொடர்ந்து வந்திருக்குமோ தெரியாது

என்னைப் பொருத்தவரை தொடர் நட்பு என்பது இல்லை

எத்தனையோ நட்புகள் வந்து போயினர்

உயிர்த்தோழி நண்பன் என்பவர் யாரும் இலர்

என் வளர்ப்பு முறை காரணமாக இருக்கலாம்

முகநூலுக்கு வந்த பிறகு நிறைய முகமறியா நட்புகள் பலர்

இங்கும் யாருடனும் குளோஸ் இல்லை ஆனால் மதிப்புடன் கூடிய அன்பு நிறைய உண்டு

இங்கு இருபாலர்களும் நட்பு கொண்டனர்

இங்கும் கூடாநட்புகளும் உண்டு இருக்கலாம் ஆனால் அவர்களைப் பற்றிக் கவலப்படுவானேன்

நட்புகளில் பழகும்போது தான் தெரிகிறது ஈகோவின் பலதரப்பட்ட முகம்

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பழகுகிறோம் என்ற இந்த ஒத்தவரி நிஜமோ உண்மையோ அல்ல

– பானுமதி நாச்சியார், சிவகிரி




Secret
# ஓவியன்

பாகம் 07

■ நிரஞ்சனா நெப்போலியன்

## நந்தகுமார்

பார்க்கவே மிகவும் பலவீனமாக வும், கல்போன்ற முகபாவத்துடனும் காணப்பட்டான் அகிலன்.

"அன்னைக்கு என்ன நடந்துச்சி?" என்றான் முருகன்.

"நான் அன்னைக்கு ஆஃபீஸ்ல இருந்தேன், சார். அது எலக்ஷன் டைம். அதனால எனக்கு அடிஷனல் டூட்டி போட்டிருந்தாங்க. அப்போ என்னோட பக்கத்து வீட்டுக்காரங்க எனக்கு ஃபோன் பண்ணி, என் வீட்டில் இருந்து ஏதோ தீஞ்ச வாசனை வருது, எவ்வளவு கதவைத் தட்டின போதும், என் வைஃப் கதவைத் திறக்கவே இல்லன்னு சொன்னாங்க. நான் என் வீட்டுக்குப் போய் பார்த்தப்போ, என் ஒய்ஃப் முழுசா எரிஞ்சு போயி, சாம்பலாகி இருந்தா, சார்." என்று கதறினான் அகிலன்.

"உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் இருக்கா?"

"என் ஒய்ஃப் ரொம்ப நல்லவ, சார். அதிர்ந்து கூட பேச மாட்டா. என்ன நடந்திருக்கும்னு என்னால யூகிக்கவே முடியல."

எதுவும் பிடிப்படாமல் அங்கிருந்து கிளம்பினார்கள் ஓவியனும் மற்ற காவல்துறையினரும்.

"அடுத்து என்ன, சார்?" என்றான் முருகன்.

"தாலுக்கா ஆஃபீசுக்குப் போகப் போறோம்."

அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம்



வந்து சேர்ந்தார்கள். முதல் வழக்கில் எப்படிப்பட்ட விபரங்கள் கிடைத்ததோ, அதே போலத் தான் அங்கும் அவர்களுக்குக் கிடைத்தது. மிகவும் வெறுமையாய் உணர்ந்தான் ஓவியன். எங்கிருந்து ஆரம்பிப்பது என்றே அவனுக்குப் புரியவில்லை.



அவர்கள் ஜிப்பை நெருங்கிய போது,

"மாம்ஸ்..." என்ற குரலைக் கேட்டு, தன் கண்களை எரிச்சலுடன் மூடினான் முருகன்.

அவனது முகபாவத்தைப் பார்த்து முகம் சுருக்கினான் ஓவியன்.

"சார், சார், ப்ளீஸ் வேலுவை சீக்கிரமா வண்டியைக் கிளப்பச் சொல்லுங்க." என்றான் முருகன்.

"உங்களை யாரோ கூப்பிடுறாங்கன்னு நினைக்கிறேன்." என்றான் ஓவியன்.

"அதுக்காக தான் சார் போகலாம்னு சொல்றேன்."

அப்போது அவர்களை நோக்கி ஓடிவந்த ஒருவன், முருகனை ஆசையாய் அணைத்துக் கொண்டான்.

"எப்படி இருக்கீங்க, மாம்ஸ்?"

"என்னை மாம்ஸ்னு கூப்பிட்டா, உன் வாயை ஒடைச்சிடுவேன்."

"ஏன்? இல்ல ஏன்னு கேக்குறேன்? உங்க பாட்டி எங்களுக்குச் சத்தியம் பண்ணி கொடுத் திருக்காங்க. நீங்க என் தங்கச்சியைக் கல்யாணம் பண்ணி தான் தீரணும். அதை மறந்துடாதீங்க" என்றான் உரிமையோடு.

"அப்படின்னா, உங்களுக்குச் சத்தியம் பண்ணி கொடுத்த என் பாட்டியைக் கேளு. எதுக்காக என்னைக் கேக்குற?" என்று எரிந்து விழுந்தான் முருகன்.

"உங்களுக்குக் கல்யாணம் முடிவாய்டுச்சா?" என்றான் ஓவியன்.

"இல்ல, சார்." என்றான் முருகன் அவசரமாக.


"ஆமாம், சார். என் பேர் நந்தகுமார். இவங்க பாட்டி, என்னோட பாட்டிக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்தாங்க, சார்."

"ஓஹோ..."

"வாயை மூடு. அந்தக் குண்டு பூசணிக்காயை நான் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்."

"என் தங்கச்சியைக் குண்டு பூசணிக்கான்னு






சொல்லாதீங்க. அவ எல்லாரையும் விட ஆரோக் கியமா இருக்கா... 110 கிலோ ஒரு குண்டா?" என்றான் நந்தகுமார் அசட்டையாக.

"110 கிலோவா?" என்று அதிர்ந்த ஓவியன்,

"நீங்க இங்க என்ன செய்றீங்க, நந்தகுமார்?" என்றான்.

"அதானே, நீ இங்க என்ன செய்ற?" என்றான் முருகன்.

"செங்கல்பட்ல இருந்து டிஸ்ட்ரிக்ட் டிரான்ஸ்பர் வாங்கிக்கிட்டு, போன வாரம் தான் நான் இங்க வந்தேன். முக்கியமா, உங்களை அடிக்கடி பார்க்கலாமுன்னு தான்."

தன் தலையில் அடித்துக் கொண்டான் முரு கன்.

"அது சரி, நீங்க எதுக்கு இங்க வந்தீங்க? என்னைப் பார்க்கவா?" என்றான் கிண்டலாய் நந்தகுமார்.

"உன்னைப் பார்க்க நான் ஏன் வரப்போறேன்? நாங்க ஒரு இன்வெஸ்டிகேஷன்காக வந்தோம்."

"இன்வெஸ்டிகேஷனா? யாரைப் பத்தி?"

"மாளவிகா"

"உயிரோட எரிச்சி கொன்னாங்களே அவளா?"

"ஆமாம்."

"நீங்க இங்க வந்து ஒரு வாரம் தான் ஆகுதுன்னு சொன்னீங்க. அப்படின்னா, ஒரு மாசத்துக்கு முன்னாடி இறந்து போனவங்களைப் பத்தி உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றான் ஓவியன்.

"மத்த எல்லாருக்கும் தெரிஞ்சதை விட, அவளைப் பத்தி எனக்கு ரொம்ப நல்லாவே தெரியும், சார்." என்றான் நந்தகுமார்.

"உங்களுக்கு அவங்களைப் பத்தி அப்படி என்ன தெரியும்?"

"அந்தப் பொம்பளைக்கு மோசமான ஒரு கடந்த காலம் இருக்கு, சார்."

"அப்படின்னா?"

"அவளும் சென்னைக்கு டிரான்ஸ்பர் வாங்கிக்கிட்டு வந்து ரெண்டு மாசம் தான் ஆகுது. சென்னைக்கு ட்ரான்ஸ்ஃபர் வந்தா, தனக்கு ப்ரமோஷன் கிடைக்க லேட் ஆகும்னு தெரிஞ்சே அவ சென்னைக்கு மாத்திக்கிட்டு வந்தா. இதுக்கு முன்னாடி அவ செங்கல்பட்ல, என்னோட ஆஃபீஸ்ல தான் வேலை செஞ் சுகிட்டு இருந்தா."

"ப்ரோமோஷன் கிடைக்கலனாலும் பரவாயில்லன்னு, எதுக்காக அவங்க அவ்வளவு அவசரமா டிரான்ஸ்பர் வாங்கிக்கிட்டு வந்தாங்க?"

அவன் கூறிய பதில் அவர்களுக்கு அதிர்ச்சி அளித்தது.

– தொடரும்...

# தினமும் புதிய புதிய இசை வீடியோக்கள் ஆன்மிக பாடல்கள் சுவையான சமையல் வீடியோக்களை வெளியிடும்

# dheivamtv.com

## இணையதளத்தை பார்க்கவும்

வாட்சப் மற்றும் தொலைபேசி எண்

**7789941009**

# மீம்ஸ் கலாட்டா


ஒருகாலத்தில் குடும்பம்
சிதறிவிடக்கூடாது என்று
குணா
பெண்கள் பொறுமையாக
அடி, உதை எல்லாம் வாங்கி,
தியாகிகளாக வாழ்ந்தனர்.
இப்போது பெரும்பாலான
குடும்பங்களில் ஆண்கள் தான் அடி,
உதை வாங்கி குடும்பம் சிதறாமல்
இருக்க , தலைவிதி என நினைத்து
அமைதியாக இருக்கின்றனர் !!


கொடுமை என்பது யாதெனில்...
நாலு இடத்துக்கு போக
பயன்படும்ன்னு கார் வாங்கி...
கடைசியில கார்
வாங்கிட்டோமேன்னு, நாலு இடத்துக்கு
போயிட்டு வர்றது தான்...


பணம் வந்தா நிம்மதி இருக்காது...
Me
நிம்மதி இல்லாட்டியும் பரவால
பணம் வாரதுக்கு எதாவது வழி
சொல்லுங்க சுவாமி


ரசத்துக்கு புளி ஊற வச்சிருக்க
போதுமானு பாத்து
சொல்லுங்க




ஒரே தரமான நம்பர் 1 நாளிதழ்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்



# என் தேசம்

இன்று சந்தோஷ் மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறான் ஏனெனில் அவனது பள்ளி தோழி லாவண் வீட்டிற்கு சென்று அவளை சந்திக்க போகிறான்

மிக குதூகலமாக இருந்தது. இதற்காக அவன் மனைவி மற்றும் மகனுடன் சென்னையில் இருந்து விஜயவாடாவிற்கு காரில் கிளம்பி இருந்தார்கள்

மனம் பின்னோக்கி அவளை சந்தித்த நாளை நினைத்தது லாவண்யாவும் சந்தோஷும் கிட்டத் தட்ட 16 வருடம் கழித்து டெல்லி ஏர்போர்ட் டில் சந்தித்து கொண்டார்கள்

அவர்கள் இருவரும் ஒரே பள்ளியில் படித்து பின்னர் வெவ்வேறு கல்லூரிகளில் பட்டப்படிப்பை முடித்து பிரிந்தவர்கள்

கால ஓட்டத்தில் ஏற்பட்ட இடைவெளி பல காலம் பிரிந்த ஆழ்ந்த நட்பு கொண்ட இருவர் சந்தித்து கொண்ட போது அடைந்த ஆனந்தத்தை வார்த்தையால் சொல்ல முடியாது

சந்தோஷ் லாவண்யாவிடம் "எனக்கு ஆச்சர் யத்தில் வார்த்தை வரவில்லை லாவண் பல வருடத்திற்கு பிறகும் நீ சிறிதும் மாறவில்லை அதே உற்சாக மனப்பான்மையோடு இருக்கே கிரேட் பா " என்றவுடன்

லாவண்யா சொன்ன ஒரு வார்த்தை சந் தோஷை ஆச்சர்யத்தின் எல்லைக்கே கொண்டு சென்றது

ஆமாம் அவள் கூறினாள் இந்த உற்சாகத்திற்கு ஒரே காரணம் என்னை புரிந்து தன் அன்பை முழுமையாக உணர்த்தும் என் கணவனே என்று!!

சந்தோஷின் மனைவி காவ்யா சந்தோஷிடம் "நீங்கள் ஒரிரு முறை லாவண்யா மூர்த்தி மது என்ற நண்பர்களை பற்றி கூறினீர்கள் ..பின்னர் கால போக்கில் எல்லாம் மறைந்து விட்டது அவரவர் தொழில் குடும்பம் என்று நட்பு கூட தொடரவில்லை என்று.. அதிலும் திருமணம் போன்ற வைபவங்களில் கூட சிலரை சந்திக்க



முடியவில்லை என்று வருந்தியதுண்டு".

"ஆமாம் காவ்யா லாவண் வீட்டில் சற்று ஏழ்மை நிலை ஆனாலும் லாவண் அதை ஒரு நாளும் வெளிப்படுத்தியதில்லை மூர்த்தி சற்று பணக்காரன் எங்கள் நட்பை மூர்த்தியின் தந்தை தடுக்க முயற்சித்து நிறைய பிரச்சனை தந்தார் ஏனெனில் மூர்த்திக்கு லாவண் மேல் ஒரு soft corner.. லைப்ரரி மற்றும் பல இடத்தில இருந்து அவளுக்கு புக்ஸ் எடுத்து கொடுத்து உதவினான், ஓரிரு சமயம் FEES கூட கட்டியுள்ளான்.

நாங்கள் நல்ல ஆரோக்கியமான நட்புடன் இருந்தோம்

ஆனாலும் மூர்த்தியின் தந்தை படுத்திய பாட்டால் எங்கள் நட்பு கலைந்து போயிற்று

அந்த விரக்தியில் மூர்த்தி கோபித்து கொண்டு சில நாட்கள் காலேஜ்க்கு வராமல் இருந்தான் ..arriers வைத்து முடித்ததாக மது ஒரு முறை சொன்னான் ".

நான் B.E முடித்து பின்னர் MBA படிக்க மணிபால் வந்த பின்னர் தொடர்பு விட்டு போயிற்று "

"லாவண் இயற்கையில் ரொம்ப துடிப்பான பெண், ஸ்போர்ட்ஸ் cultural எல்லாத்திலும் ஆர்வம் உண்டு யதார்த்த நட்பை மூர்த்தி அப்பா புரிந்து கொள்ளாததால் அவன் கல்லூரி படிப்பு கெட்டு போச்சு என்றபடி சந்தோஷ் பெரு மூச்சு விட்டான்

பாரு இப்போ நம்ம பிள்ளைக்கே 10 வயது ஆகிவிட்டது இவ்வளவு வருடம் கழித்து என்னை அடையாளம் கண்டு லாவண் பேசிய போது அதிர்ச்சி ஆனந்தம் ..அதிலும் அவள் வீட்டிற்கு வர வேண்டும் என்று கூறிய பிறகு எப்படி போகாமல் இருப்பது ..

அதுதான் இந்த முறை நமது விடுமுறை நாளிற்கு நிச்சயம் விஜயவாடா தான் போகணும் என்று தீர்மானித்தேன்

விஜயவாடாவில் லாவண் வீட்டில் தடபுடலாக சந்தோஷ் குடும்பத்தை வரவேற்ற லாவண்யாவுடன் அவளது 5 வயது மகள் சஞ்சு " அம்மா நீ சொன்ன சந்தோஷ் அங்கிள் வந்தாச்சா " என்றபடி பட்டு பாவாடை சர சரக்க ஓடி வந்தாள்

சந்தோஷ் இந்த குழந்தை முகம் எங்கோ பார்த்தால் போல் இருக்கிறதே என்று யோசிக்கும் போதே உள்ளிருந்து வெளிவந்த லாவண் கணவனை பார்த்த நொடியில் புரிந்து விட்டது சந்தோஷிற்கு .. ஆமாம் லாவண்யாவின் கணவர் மூர்த்தியே !!

சந்தோஷிற்கு மூர்த்தியை பார்த்ததில் ஆனந்தம் இருந்தாலும் அதிர்ச்சியும் உண்டாயிற்று

ஏன் எப்படி உறைந்து போனான் சந்தோஷ் அதிலும் மூர்த்தியின் இடது கை இல்லை மேல்ச்சட்டையால் கையை மறைத்த படி வந்த மூர்த்தி ..

அதிர்ச்சி தாங்காமல் மூர்த்தி கேட்டான் "16 வருட இடைவெளியில் என்ன நடந்தது ?"

லாவண் படிப்பு முடித்த பிறகு வேலைக்கான ட்ரைனிங்கிற்கு டெல்லி போய் திரும்பும் போது ரயிலில் உள்ள கிஸிவிசீ கம்பார்ட்மெண்டில் இருந்து வெளியில் வந்த மூர்த்தியை பார்த்த லாவண்யாவிற்கு ஆச்சர்யம் ..கல்லூரி படிப்பில் பாதியில் நின்ற மூர்த்தி பின்னர் வீட்டை விட்டு ஓடி போய்






தந்தையிடம் கூறாமல் ராணுவத்தில் சேர்ந்து விட்டது தெரிந்தது "நான்தான் அவர் தந்தையிடம் மூர்த்தி ராணுவத்தில் சேர்ந்ததை கூறினேன் "என்றாள் லாவண்.

கார்கில் போரில் ஈடுபட்டது பின்னர் பல ராணுவ பணியில் ஈடுபட்டு தேச நினைப்பில் மட்டுமே இருந்து பரிசுகளை குவித்த மூர்த்தியின் பால் கொஞ்சம் கொஞ்சமாக என் மனம் ஈடுபட்டது ஆனாலும் அவர் தந்தைக்கு பயந்து வெளிக்காட்டி கொள்ளாமல் இருந்தேன்

ஓரிரு வருடங்களுக்கு பிறகு ஒருமுறை ஏர்போர்ட்டில் மூர்த்தியின் தந்தையை சந்தித்த போது அவரே என்னிடம் வந்து பேசிய போதுதான் தெரிந்தது மூர்த்தி ஒரு ராணுவ போரில் எல்லை பாதுகாப்பு பணியில் இருந்த போது ஒரு கையை இழந்து விட்டார் எனினும் ராணுவத்தில் பணிபுரிய விரும்புவர்களுக்கு ஆலோசனை மற்றும் கீழ்நிலையில் வேலையில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கென்று ஒரு டிரஸ்ட் வைத்து பாடம் நடத்துவது என்று சமூக சேவையில் ஈடுபட்டுள்ளதை கூறினார்



அந்த சூழலில் நான் என் மனதில் உள்ளதை கூறி மூர்த்தியை திருமணம் செய்தேன் அவரின் அன்பில் எங்கள் வாழ்க்கை அற்புதமான அஸ்திவாரமாகி விட்டது

அவர் தேசத்திற்கு உழைத்து மேலும் பலரை தேசத்திற்காக உழைக்க தயார் படுத்துகிறார்

அவரது ஆசை ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு வருடமாவது தங்களது வாழ்வில் நாட்டிற்காக தங்கள் உழைப்பை அர்ப்பணிக்க வேண்டுமென தயார் படுத்துவதே

எனக்கும் காவ்யாவிற்கும் வார்த்தை வரவில்லை ..நான் முடிவு செய்து விட்டேன் நானும் என் தேசத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என

மனிதர்கள் மட்டுமே ஒரே மாதிரி இருப்பதில்லை .. அதிக மாற்றங்கள் மனிதர்களிடமே என்று லாவண் கூறியதில் ஏதோ அர்த்தம் உள்ளது .

– செல்லம் சேகர்

# உன் வாழ்வு உன் கையில்

விக்ரமுடைய பிறவிக்குணமே அதுதான். எப்போதும் பிறரைப் பார்த்தே வாழ்வது.

அவனுடைய விரல்கள் மொபைலில் மற்றவர்களின் வாழ்க்கையைத்தான் தேடும்.

அவர் வெளிநாட்டில் வாழ்கிறார்.

இவர் புதிய கார் வாங்கியிருக்கிறார்.

அவர் பெரிய வீடு கட்டியுள்ளார்.

இப்படியாக தன்னைக் காண்பதை விட

பிறரின் வாழ்க்கையையே பின் தொடர்வான்.

"நானும் அப்படி இருக்கணும்"

"என்னோட வாழ்க்கை ஏன் இப்படி?"

என்ற ஒப்பீட்டு கேள்விகள் தினமும் அவனைத் துரத்திக் கொண்டேயிருந்தன.

அவனுடையது சிறிய வீடு. அன்பான மனைவி. “அப்பா” என்று ஓடி வரும் ஒரு குட்டி. மாதச் சம்பளம் சரியாக வந்து கொண்டிருக்கும் ஒரு வேலை.

ஆனால் அவனுக்கு போதவில்லை.

அவன் வாழ்ந்தது தன் வாழ்க்கை இல்லை, பிறரின் வாழ்க்கையை.

அன்று கன மழை. மின்சாரம் போனது.

மொபைல் பேட்டரி காலியானது.



முதலில் அவன் சலித்தான். பின்னர் அமைதி காத்தான்.

அவன் மகள் மெழுகுவர்த்தி ஒளியில் சிரித் தாள். "அப்பா, நம்ம வீட்டுல இப்படி மின்சாரம் போகும் போது ரொம்ப நல்லா இருக்கல்ல?!” என்றாள்.

மனைவி சமையலறையிலிருந்து சிரித்தாள்.





விக்ரம் முதல் முறையாக தன் வீட்டைப் பார்த்தான். தன் மகளைப் பார்த்தான்.

தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான். உணர்ந்தான்.

"ச்சே... இத்தனை நாள்... பிறரைப் பார்த்துப் பார்த்து ஓடியதில் என் மகிழ்ச்சியைத் தவற விட்டு விட்டேன்"

அடுத்த நாள், காலைத் தேநீரைச் சுவைத்தான். மகளுடன் சிரித்து விளையாடினான். மனைவியுடன் செல்லமாய்ச் சண்டையிட்டு சமாதானமானான்.

மொபைலை மறந்தான். சமூக வலைதளங்களைத் துறந்தான்.

தன் உத்தியோகத்தை நேசிக்க ஆரம்பித்தான்.
மாறியது வாழ்க்கை இல்லை.
மாறியது பார்வை.
"நாம் நாமாக வாழ நினைத்தால்
மகிழ்ச்சிக்கு எல்லையில்லை!... பிறரைப் போல வாழ நினைத்தால் நம்ம வாழ்க்கையே நமக்கு இல்லாமல் போய் விடும்.

– முகில் தினகரன்

பன்முகம்


www.panmugam.com
பன்முகம் •காம்

ஆசிரியர், வெளியீட்டாளர்
மகாலட்சுமி
MahaLakshmi
Cell: 9337501889

முதன்மை செய்தியாளர்
Rakesh, C.N.Rajan

துணை ஆசிரியர்கள்
Tina, Arulmozhi,
Thenuka

வடிவமைப்பு
SML GRAPHICS Ph:9444228203

Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar
Chennai 600081

தொடர்பு கொள்ளவும்
7789941009



## இதழ்குறித்த தன்னிலை விளக்கம்

இந்த இதழ் முழுவதும் இணையதளத்தையும், வலைதளங்களையும் சார்ந்தே திரட்டப்படும் செய்திகளை ஒழுங்குப்படுத்தி தரப்படும் தன்னிகரில்லா இதழாகும், இந்த தளத்தில் வெளிவரும் செய்திகள், விளம்பரங்கள் புகைப்படங்கள் அனைத்தையும் எந்தவித லாபநோக்கமின்றி தொகுக்கப்பட்டு நேர்த்தியாக ஒழுங்குபடுத்தி வாசகர்களின் பார்வைக்கு கொடுக்கும் சிறப்பான ஒரு சேவையை செய்துவருகிறோம். இந்த இதழில் வரும் அனைத்து செய்தி, விளம்பரம், புகைப்படத்திற்கு எந்தகாரணம் கொண்டும் எவ்விதத் தனிநபரும் பொறுப்பாகமாட்டார்கள், மற்றபடி இணையதள சட்டவரன்முறைக்கு ஏற்ப இந்த இதழ் தயாரிக்கப்படுகிறது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சட்ட வரன்முறையின் வழி பிசகாமல், மற்றவரை இகழ்வது, தாழ்த்துவது, சமுதாயத்தை சீரழிக்கும் செய்திகளை வெளியிடுவது கிடையாது. சேவை மட்டுமே நமது நோக்கம்.


அட்டையில்: யூத் பட நாயகி
அனிஷ்மா அனில்குமார்

# மீம்ஸ் கலாட்டா


எனக்கு ஏதும் செய்யாவிட்டாலும்
பரவாயில்லை..,
#God
#Me
எனை வைத்து
செய்யாமல் இருக்கலாம் அல்லவா..!!!


யாரோ கேட்டிங்கல Meme போடுறவனுக்கு
Love பத்தி என்ன தெரியும் னு
**தா ஒவ்வொரு Memer க்கு பின்னாடியும்
ஒரு Love Failure ஸ்டோரி யே இருக்கு டா


வாக்காளரின் மனநிலை
விலைவாசி உயர்வின் போது
தேர்தல் அறிக்கையை பார்க்கும் போது
ஓட்டுக்கு பணம் வாங்கிய பிறகு....


இந்த தடவை தீபாவளிக்கு 1 லட்சம்
போனஸ்ன்னு சொல்றாங்க
இல்ல ஜீ இந்த தடவை ப்ரொடக்ஷன் அதிகம்ல
அதனால 2 லட்சம்ன்னு பேசிகிட்டாங்க, டேக்ஸ்
வேற பிடிப்பாங்களான்னு தெரியல...
கம்பெனி
தீபாவளிக்கு போனஸ்க்கு அந்த சோன் பப்டி
ஆர்டர் போடு



# கடல் மணல் நிறைந்த தீவில் ஒரு கற்கோவில்

# ராமேஸ்வரம் இராமநாதர் கோவில் உருவான வரலாறு

ராமேஸ்வரம் ஒரு தீவு.... அங்கேமலைகளோ, குன்றுகளோ கிடையாது. அதனால் கருங்கற்களும் கிடையாது வெறும் கடற்கரை..

ஒரு தீவில், அதுவும் மணல் மட்டுமே நிறைந்த மணற்ப்பரப்பில் பல்லாயிரம் டன் எடையுள்ள கருங்கற்களை கொண்டு ஒரு பிரம்மாண்ட மலையே எழுப்பி கட்டி இருக்கிறார்கள் நம்முன்னோர்கள்.

கிட்டத்தட்ட 800 வருடங்கள் உழைப்பில் உருவானது இந்த ஆலயம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டு வரை..

ராமேஸ்வரம் கோவிலைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட கருங்கற்கள் அனைத்தும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவை.

அந்தக் காலத்தில் 20 முதல் 30 டன் எடையுள்ள கற்களை ஏற்றிச் செல்லவே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பெரிய மரத் தோணிகளைப் பயன்படுத்தினார்கள். இவை அகலமான



அடிப்பகுதியைக் கொண்டவை.

ஒரு பெரிய கல் தூணை ஒரு படகில் ஏற்றுவதற்குப் பதிலாக, இரண்டு அல்லது மூன்று பெரிய படகுகளை ஒன்றாக இணைத்து, அதன் மேல் ஒரு வலுவான மர மேடையை அமைப்பார்கள்.

இதனால் பாரம் சமமாகப் பிரிக்கப்பட்டு, படகு கவிழாமல் மிதக்கும். இதை இன்று நாம் "பாண்டூன்" (Pontoon) என்று அழைக் கிறோம்.

அடுத்து.......இரண்டு பெரிய படகுகளை இணைத்து, நடுவே அந்தப் பிரம்மாண்ட தூணைக் கட்டித் தொங்கவிட்டனர். தண்ணீருக்குள் கல்லின் எடை குறைவு என்ற 'மிதப்பு விசை' தத்துவத்தைப் பயன்படுத்தி, கடலின் ஆழமான பாதைகளில் அந்தப் பாரத்தைச் சுமந்து வந்தனர்.

தரை தட்டாமல் இருக்க, நிலவு மற்றும் ஓதங்களின் (Tides) நேரத்தைக் கணித்து கடல் மட்டம் உயரும்போது படகுகளை நகர்த்தினார்கள்

ராமேஸ்வரம் கடல் அலைகளே இல்லாமல் குளம் போல அமைதியாக இருப்பதுதான் இதற்குப் பெரிய உதவியாக இருந்தது.

அலைகள் அதிகமாக இருந்தால் படகு ஆடும், கல் கீழே விழுந்துவிடும்.

ஆனால் அமைதியான கடல் என்பதால், டன் கணக்கிலான பாரத்தை ஏற்றிய படகுகள் எந்த ஆபத்தும் இல்லாமல் நிதானமாகத் தீவை அடைய முடிந்தது.

கரையை அடைந்த கற்களை, பல நூறு யானைகள் மற்றும் காளைகளைக் கொண்டு இழுத்து வந்தனர். உயரமான இடங்களுக்குக் கற்களைக் கொண்டு செல்ல, மண் சரிவுப் பாதைகளை (Earth Ramps) அமைப்பார்கள்.


அதாவது, கோவிலின் உயரம் வளர வளர, மண்ணைக் கொட்டி ஒரு பெரிய மேடு போலச் செய்து, அதன் வழியாக யானைகளை வைத்து கற்களை மேலே தள்ளிக் கொண்டு செல்வார்கள். கோவில் கட்டி முடித்ததும் அந்த மண் அகற்றப்படும்.

ராமேஸ்வரம் கோயிலின் அஸ்திவாரம் என்பது 'மிதக்கும் அஸ்திவாரம்'



நம் முன்னோர்கள் "சாண்ட்விச்' முறையைப் பயன்படுத்தினார்கள்..

முதலில் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் உள்ள மணலைத் தோண்டி, அங்கே நீர் ஊற்றி நிறைய யானைகளை விட்டு நடக்கச் செய்வார்கள். யானையின் கால் படும்போது அந்த இடத்தின் மணல் பல டன் அழுத்தத்திற்கு உள்ளாகும்.



இதனால் மணலுக்கு இடையில் உள்ள காற்று வெளியேறி, அது பாறை போல இறுகிவிடும்.

அதன் மேல் கருங்கற்களை அடுக்குவதற்கு முன் கடுக்காய், சுண்ணாம்பு, கருப்பட்டி மற்றும் சில மூலிகைச் சாறுகளைக் கலந்து ஒரு 'பேஸ்ட்' போலச் செய்து இடையில் பூசினார்கள். இது காலப்போக்கில் கல்லை விடவும் வலிமையான ஒன்றாக மாறிவிடும்.இதற்குப் பிறகுதான் கற்களை அடுக்கத் தொடங்கினார்கள். இது நிலநடுக்கம் வந்தாலும் தாங்கும் வலிமை கொண்டது.

மணல் என்பதால் ஒரு பக்கம் பாரம் அதிகமானால் கோயில் சாய்ந்துவிடும்.எனவே, மேற்கூரையின் எடையைத் தூண்கள் தாங்கும் போது, அந்தப் பாரத்தை மணலுக்குக் கடத்தாமல் தரைப்பகுதியில் பிரம்மாண்டமான 'தளவரிசை கற்களை' (Paving stones) விரித்தார்கள். இது பாரத்தை சமமாகப் பிரித்துக் கொடுத்தது.

ராமேஸ்வரத்தின் 3வது பிரகாரம் உலகப் புகழ் பெற்றது. இதில் சுமார் 1212 தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணும் 20 இருந்து30 டன் எடை கொண்டது..

உலகிலேயே மிக நீளமான அந்தப் பிரகாரத்தின் தூண்கள் அனைத்தும் துல்லியமான சமச்சீர் நிலையில் உள்ளன. ஒரு முனையில் நின்று பார்த்தால், அனைத்துத் தூண்களும் ஒரே நேர்க்கோட்டில் தெரியும். இத்தனை ஆயிரம் டன் பாரம் கீழே இருக்கும் மணலை அழுத்தாமல் இருக்க, ஒவ்வொரு தூணின் அடியிலும் மிகப்பெரிய கல் பலகைகளை விரித்து எடையைச் சமமாகப் பரப்பினார்கள் (Weight Distribution).

இந்தத் தூண்களை நிலைநிறுத்த 'Lock and Key' முறை எனப்படும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணையும் முறையைப் பயன்படுத்தினார்கள்.

நம் முன்னோர்களின் ஆழ்ந்த அறிவு நுட்பம் பிரமிக்க வைக்கும்

"ராமேஸ்வரம் கோவில் ஆன்மீக இடம் மட்டுமல்ல.. அது, ஒரு 'அறிவியல் கூடம்..

நம் தமிழ் முன்னோர்கள் மணலில் மலை போன்ற கோயிலைக் கட்டி, அதன் நிழலில் உலகையே வியக்க வைத்துள்ளான்.

தொழில்நுட்பம் என்பது நம் இரத்தத்தில் ஊறிய ஒன்று,.. அது நேற்று இன்று வந்ததல்ல.

– முனைவர் இராம.வேதநாயகம்.



# பொய்யே நேர்மையாக்கும்

பரீட்சைக்கு நேரமாச்சின்னு படிச்சிக்கிட்டு இருந்தவனை அதிகாரமாய் கூப்பிட்ட செண்ப கராமன், இவரு அவன் அப்பாதான், இவர் அரசு ஊழியர் என்பதால் அதே மிடுக்கை, அதி காரத்தை வீட்டிலும், சொந்தப் பந்தங்களிலும் பயன்படுத்துவார்,

"என்னப்பா, நான் படிக்கிறேன் தெரிய லையா,,?"

முறைத்துப் பார்த்தப்படி "ஒன்ன படிக்க வைக்கிறதே நான்தான்டா முண்டம், எனக்கு தெரியாதா,,, நீ படிக்கிறது, போ,,, போயி பாய் வீட்டு கடையில ஒரு பாக்கெட் சிகரெட் வாங் கிட்டு வா "

"சரி பணம் கொடுங்க, வாங்கிட்டு வரேன்"

ஒரு பாக்கெட் சிகரெட் வாங்கி அதை முகர்ந் துப் பார்த்தப்படியே வந்தான், அந்த வாசனை நல்லா இருந்து அவனக்கு, சிகரெட்டைகொண்டு வந்து அப்பா கையில் கொடுத்து விட்டு நகர்ந் தான்

"டேய் தம்பி, நான் சிகரெட் குடிக்கிறேன்னு நீயும் குடிக்க பழகாதே அப்புறம் சாமி கண்ணக் குத்தும் "

"என்னப்பா சொல்றீங்க, நீங்க பழகுறப்ப உங்க கண்ணை சாமி குத்தலையா"

"அதியப்பிரசங்கி தனமா பேசாதே, சொன் னாக் கேளு, புரியுதா,,?"

"நான் இப்போ வாய்மை அதிகாரத்தைப் பற்றி படிச்சிக்கிட்டு இருக்கேன், நீங்க பொய்யை பிர தானமா சொன்னா பின்னே கோபம் வராதாப்பா"



"அடே நீ சின்னப்பையன் உனக்கு ஒன்னும் தெரியாது, பொய்யிதான் மனுசனை நேர்மையா வாழவைக்கிறது, வள்ளுவர்கூட பொய்மையும் வாய்மையுடைத்துன்னு சொல்லி இருக்காரே படிக்கலியா,,,?"

"இதுயென்னப்பா புதுசா இருக்கு, கொஞ்சம் புரியும்படிதான் சொல்லுங்களேன்"

"இப்போ நீ கடைக்கு போய் வந்ததும் நான் சாமி கண்ணக் குத்துமுன்னு சொன்னேனா,,, சாமி கண்ணைக் குத்தாது, ஆனா,,, சாமி கண்ணைக் குத்துமுன்னு நீ தவறு செய்யாமல் இருப்பியே அப்போ அந்தப் பொய்தானே உன்னை நேர்மையாளனாக மாற்றுது, தர்மம் தலைக்காக்குமுன்னு சொல்வாங்க, அது எப்படி உன் தலையைக் காக்கும், அப்படி பொய் சொன்னாதான் நீ தர்மம் செய்வாய் என்பதால்தான் அப்படி அந்தக் காலத்தில் சொன்னார்கள்"

"ஓ.. இந்தப் பொய்யிலே இவ்வளவு மெய் இருக்காப்பா,,"

"அது மட்டுமல்லடா, இந்த பூமியில் வாழும் போது நீ நல்லது செய்யணும், யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது, யாரையும் ஏமாற்றக்கூடாது, மனித நேயத்தோடு வாழணும் அப்பதான்செத்துப் போனா சொர்க்கத்துக்கு போகலாம் என்பார்கள், அங்கே போனால் நல்லா இருக்கலாம் என் பார்கள்.

செத்துப்போனவன் எவன் சொர்க்கத்துக்கு போய்ட்டு திரும்பி வந்து இந்த செய்தியைப் பரப்பியது, இல்ல,

செத்துப்போனவன்தான்திரும்பி வருவானா,,, சொர்க்கம் ஒன்று இருக்கு, அங்கப் போனா மறு ஜென்மத்திலும் நல்லா இருக்கலாம் என்று ஒரு பொய்யை அவுத்து விட்டாதான் நீ நல்லது செய்வ, நல்லதே நினைப்ப, என்பதற்காக சொன்னப் பொய்தான் சொர்க்கம், இதுப்போல நிறைய பொய்கள்,,,,

கட்டுக்கதைகள் எல்லாமே பொய்தான், ஆனால் அவை மனிதனை நல்வழிப் படுத்துவ தற்காக சொல்லப்பட்டவைதான், இப்பச் சொல்லு, பொய் நல்லதா, கெட்டதா,,,?"

"நீங்க சொல்றதைப் பார்த்தா நல்லதுதான் போல தெரியுது, இருந்தாலும் நானும் யோசிக்கி றேன்ப்பா"

"சரி,,, சரி பரிட்டைக்கு நேரமாச்சி, ஆனா மகனே பரிட்சையிலே மெய்தான் எழுதனும், பொய் எழுதினா, சாமி கண்ணைக் குத்தாது, வாத்தியார் கன்னத்தை பழுக்க வச்சிருவார்"

ஓ,,, நம்மள ஏமாற்றி நேர் வழியில் செல் வதற்குதான் இத்தனை பொய்யா என வியந்தப்படி வாய்மை அதிகாரத்தை மனப்பாடம் செய்தான்.

– நாகை ஆசைத்தம்பி,
கோவை

# மீம்ஸ் கலாட்டா


எம்பிபிஸ் படிச்சவன் டாக்டர் வேலைய தவிர வேற எந்த வேலையும் பாக்க மாட்டான்...
ஆனா BE படிச்சவன் இஞ்சினியர் வேலைய தவிற எல்லா வேலையும் பாக்றான்..!


மழை + காபி +பஜ்ஜி +இளையராஜா சாங்ஸ் =சொர்கம்❤️❤️
இப்படி ல சொல்ல ஆசை தான் ஆனா அந்த பஜ்ஜி யே நம்ம தான் போடணும் னு நினைக்கும் போது தான்...


நான் என்ன பேசினாலும் மீம்ஸ் போடுறாங்கப்பா...
ஃபீல் பண்ணும் அமைச்சர் :(
-ஜெயகுமார்
மீம் போடாத மாதிரி பேசுங்க அண்ணே !!


காதலர் தினம் வேற வருது லவ் பண்ணலாம்னு ரொம்ப ஆசையா இருக்கு
ஆனா பொண்டாட்டிய நினைச்சா தான் ரொம்ப பயமா இருக்குதே என்ன பண்ணலாம்



# வயிறு பிரச்சனையும் எளிய தீர்வுகளும்

சாப்பிட்ட உடனே வயிறு உப்பசமாக இருக்கிறதா? எரிச்சல் மற்றும் அஜீரணத்தின் உண்மையான காரணத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்!

இன்றைய காலத்தில் பலரும் சந்திக்கும் ஒரு பொதுவான பிரச்சனைஷிசாப்பிட்ட உடனேயே வயிறு உப்பசம் (Bloating), கேஸ் தொல்லை மற்றும் ஒருவிதமான கனத்த உணர்வு ஏற்படுவது.

உங்களுக்கும் இந்த பிரச்சனை இருந்தால், அதை அலட்சியப்படுத்தாதீர்கள். இது உங்கள் செரிமான மண்டலம் உங்களுக்குக் கொடுக்கும் ஒரு எச்சரிக்கை சிக்னல்.

இந்த பிரச்சனை ஏன் ஏற்படுகிறது?

(முக்கிய காரணங்கள்)

தவறான உணவுப் பழக்கம்: உணவை மிக வேகமாகச் சாப்பிடுவது அல்லது சரியாக மென்று சாப்பிடாமல் இருப்பது. இதனால் உணவு சரியாகச் செரிக்காமல் கேஸ் உருவாகிறது.

தவறான உணவு சேர்க்கை:

செரிமானத்திற்கு கடினமான சில உணவுகளைச் சேர்த்து உண்பது. உதாரணமாக:

பருப்பு + தயிர்


பொரித்த உணவுகள் + இனிப்புகள்

இது வயிற்றில் புளிப்புத்தன்மையை (Fermentation) உருவாக்கி எரிச்சலைத் தரும்.

உணவின் போது அதிக தண்ணீர் குடித்தல்:

சாப்பிடும்போது அடிக்கடி தண்ணீர் குடிப்பது செரிமான அமிலங்களின் (Digestive Juices) வீரியத்தைக் குறைக்கும். இதனால் உணவு சரியாகச் செரிக்காது.

சாப்பிட்ட உடனே படுத்தல்: சாப்பிட்ட உடனேயே படுத்துக்கொண்டால் செரிமானம் மந்தமாகி, வயிற்றில் கனத்த உணர்வு அதிகரிக்கும்.



மனஅழுத்தம்: கவலை மற்றும் மன அழுத்தம் உங்கள் குடல் ஆரோக்கியத்தை நேரடியாகப் பாதிக்கும். இது அசிடிட்டி மற்றும் கேஸ் தொல்லையை அதிகப்படுத்தும்.

அறிகுறிகள் என்னென்ன?

வயிறு வீங்கியது போன்ற உணர்வு

அடிக்கடி ஏப்பம் வருதல்

வாயு வெளியேறுதல்

வயிற்றில் கனத்த உணர்வு

லேசான வயிற்று வலி அல்லது அசௌகரியம்

நீங்கள் செய்ய வேண்டியவை என்ன?

1. சரியான முறையில் உண்ணுங்கள்:மெதுவாகச் சாப்பிடுங்கள்; ஒவ்வொருவாய் உணவையும் நன்றாக மென்று விழுங்குங்கள்.
2. சாப்பிட்ட பின் இதைத் தவிர்க்கவும்: உடனேயே படுக்க வேண்டாம். குறைந்தபட்சம் 15–20 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்யுங்கள்.
3. வீட்டு வைத்தியம்: * இஞ்சி: செரிமானத்தை மேம்படுத்தும். சீரகத் தண்ணீர்: கேஸ் தொல்லையைக் குறைக்கும். பெருங்காயம்: வயிறு உப்பசத்திலிருந்து நிவாரணம் தரும்.
4. எப்போது தண்ணீர் குடிக்க வேண்டும்? *சாப்பிடுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன். சாப்பிட்டு 30–40 நிமிடங்களுக்குப் பின். உணவின் போது மிகக் குறைந்த அளவு தண்ணீர் குடிக்கவும்.
5. எளிமையான உணவுகள்: எண்ணெய் மற்றும் காரமான உணவுகளைக் குறைத்து, நார்ச்சத்துள்ள (Fiber) உணவுகளை அதிகப்படுத்துங்கள்.

முற்றிலும் தவிர்க்க வேண்டிய தவறுகள்:

அளவுக்கு அதிகமாக உண்ணுதல் (Over-eating)

ஜங்க் ஃபுட் (Junk Food)

குளிர்பானங்கள் / சோடா

இரவு நேரத்தில் தாமதமாக கனமான உணவை உண்ணுதல்

தினமும் 10–15 நிமிடம் யோகா செய்யுங்கள்:

பவனமுக்தாசனம் (Pawanmuktasana) *

வஜ்ராசனம் (Vajrasana) * இவை கேஸ் மற்றும் வயிற்று உப்பசத்திற்கு மிகச் சிறந்த பலனைத் தரும்.



முடிவு: வயிறு உப்பசம் என்பது ஒரு பெரிய நோய் அல்ல, ஆனால் உங்கள் உணவுப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள உங்கள் உடல் தரும் எச்சரிக்கை.

உங்கள் பழக்கங்களைச் சரிசெய்தாலே இந்தப் பிரச்சனையிலிருந்து எளிதாக விடுபடலாம்.

- Balachandar



# கோடை விடுமுறை

என்ன சார்.?. பத்து நாள் லீவ் போல.. ஏதாவது சம்மர் டூரா.?. கேட்டபடியே வந்தார் அவர்.

இல்லைங்க. பசங்களுக்கு லீவு விட்டாச்சு. கொண்டு போய் ஒரு மாசம் எங்க அப்பா, அம்மா கிட்டே விட்டுட்டு வரலாம்னு இருக்கேன். அப்படியே நானும் பத்து நாள் தங்கிட்டு வரலாம்னு. ஊருக்குப் போய் நாளாச்சே.?.. பதிலளித்தார் இவர்.

அட என்ன சார் நீங்க.? உங்க ஊரே ஒரு கிராமம். வசதிகள் குறைவு. சிட்டி லைப்லேயே வாழ்ந்த பசங்க உங்களுக்கு. அவங்களுக்கு அங்க செட்டாகுமா.? போரடிக்காதா.? அப்பா, அம்மாவை இங்க வரவச்சிட்டு, ஜாலியா இருக்கறதை விட்டுட்டு.. என்றார் அவர்.

வசதியெல்லாம் மனசைப் பொறுத்தது தாங்க. மனசு சந்தோஸமா இருந்தா போதுங்க. அதுவுமில்லாம, ஊர்ல சொந்தக்காரங்க எல்லோருக்கும் நம்ம பசங்களையும், நம்ம பசங்களுக்கு அவங்களையும் முழுசா தெரிய வேணாமா.? எல்லாரையுமா இங்க வரவழைக்க முடியும்.?.. கேட்டார் இவர்.

சார்.. பையன் பத்தாவது எழுதியிருக்கான். அடுத்து கோச்சிங் கிளாஸ், கான்ஸன்ட்ரேஷன் கிளாஸ், யோகா கிளாஸ்னு ஏகப்பட்ட விஷயமிருக்கு. அதையெல்லாம் விட்டுட்டு, ஊருக்குப் போய் பசங்களோட எதிர்காலத்தை வீணாக்குறீங்க சார்.. என்றார் அவர்.

நீங்க சொன்ன அத்தனை கிளாசும் கூட்டுக் குடும்பத்துலேயே இருந்ததுங்க. அதை விட்டுட்டு பொழைக்க தனியா வந்ததில தான், இப்போ எல்லாத்துக்கும் கோச்சிங் கிளாஸ் தேட வேண்டியிருக்கு.. என்றார் இவர்.

காம்பெடிஷன் அதிகம் சார். இப்போலேர்ந்தே எல்லாத்துக்கும் பசங்களைத் தயார் பண்ணணும். அதுக்குத் தான் சொல்றேன்.. என்றார் அவர்.



தன்னம்பிக்கையும், தைரியமும் தர்றதே நம்ம உறவுகள் தான் சார். அதை இழந்துட்டு, எதைக் கத்துக்கிட்டும் பிரயோஜனமே இல்லை சார்.. என்றார் இவர்.

புரியலை சார்.. என்றார் அவர்.

பிரச்சனையே அதான். இங்கே நிறைய பேர் தன் பசங்க எல்லாத்தையும் கத்துக்கணும்னு நெனக்கறாங்களே தவிர, வாழக் கத்துக் குடுக்கறதே இல்லை.

சொந்தக்காரங்க ஒவ்வொருத்தரும் ஒரு மாதிரி சார். அத்தனை பேரையும் பசங்களுக்கு எப்படி சமாளிக்கறது, எப்படி பழகறதுன்னு தெரிஞ்சாத் தான், நாளைக்கு வெளி உலகத்துல எப்படி எல்லோர்கிட்டேயும் பழகறதுன்னு தெரியும். அதுவுமில்லாம, நமக்காக இத்தனை பேர் இருக்காங்க அப்படின்ற தைரியமும் வரும். நாம தப்பு செஞ்சா இத்தனை பேர் கேட்பாங்கன்ற பயமும் இருக்கும்.

இதையெல்லாம் தாண்டி, வருஷத்துல இந்த ஒரு மாசத்தை எதிர்பார்த்து வருஷம் பூரா காத்திட்டிருக்கற வயசானவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. பணம் சம்பாரிக்க, படிக்க, பிழைக்கன்னு ஏதாவது ஒரு காரணத்தால பிரிஞ்சு கிடக்கிற குடும்பம், இந்த ஒரு மாசம் இணைஞ்சிருக்கறதால அவங்க அடையற சந்தோஷத்தை, நீ என்ன விலை கொடுத்து, எதை வாங்கித் தந்தாலும் கிடைக்காது.

இந்த வயசுல எங்க அப்பாவுக்கு நான் அடங்கி நடக்கறதையும், எங்க அம்மா மடில நான் படுத்து தூங்கறதையும் எம் பிள்ளை பார்த்தாலே போதும். பாசம்னா என்னன்னு புரிஞ்சுப்பான். என்னை கொண்டாட ஆரம்பிச்சுடுவான். இதையெல்லாம் கோச்சிங் கிளாஸ் சொல்லிக் குடுக்காது.



பசங்களுக்கு எல்லாம் தெரிய ணும்கறதை விட, நல்லது தெரிய ணும்கறது தான் முக்கியம்.

எம் பசங்க நிறைய சம்பாரிக்



கறான்.. பெரிய அதிகாரி.. அப்படின்றது எனக்குப் பெருமையில்லை. எம் பையன் என்னை நல்லாப் பார்த்துக்கறான்னு முழு மனசோட நான் கடைசி காலத்துல சொல்லணும். எங்கப்பா என்னை நல்லா வளர்த்தார்னு அவன் சொல்லணும்.

அது தான் முக்கியம். அதுக்கு நான் அது மாதிரி நடந்து காட்டணும். ஏன்னா, எம் பசங்களுக்கு நான் தான் ஹீரோ. நான் செய்யறது தான் சரின்ற நம்பிக்கை வரணும். அதை எங்க அப்பா கிட்டே நான் நடந்துக்கற முறை கத்துக் குடுக்கும்.

நமக்கும் வயசாவும். நாளைக்கு எம் பையனும் அப்பா ஆவான். அவன் வாழ்க்கைலையும் இதேபோல சம்மர் லீவுன்னு ஒண்ணு வரும். அப்போ அவன் என்னைத் தேடணும். அவனுக்காக மட்டுமில்லை.. அவனோட பசங்களுக்காகவும். அதுக்குத் தான் இவ்வளவும்... என்றார் இவர்.

அது வந்து.. என இழுத்தார் அவர்.

இதோ பாருங்க நண்பரே.. எம்மேல பாசமா இருப்பான்னு எம் பையன் என்னைக் கேட்கலை. ஆனா, நான் இருக்கேன். அதே மாதிரி, எம்மேல பாசமா இருப்பான்னு நான் அவனைக் கேட்க மாட்டேன். ஆனா, அவன் இருப்பான்.

அதுக்கு, பாசம், குடும்பம், உறவுன்னா அவனுக்குத் தெரியணும். ஒரு அப்பாவா நான் தெரிய வைக்கிறேன். எனக்கு எங்கப்பா கத்துக் குடுத்ததை நான் கத்துக் குடுக்றேன். இது தான் இப்போதைக்கு தேவையான கோச்சிங் கிளாஸ்.

நாம விதைச்சது பெரிய மரமாகறது முக்கியம்னு சில பேர் எண்ணம்.

அது விஷ மரமா யாருக்குமே பயனில்லாம போயிடக் கூடாதுங்கறது என் எண்ணம்.

தலைமுறைங்கறது நாம மட்டுமே இல்லை. நமக்கு முன்னாடி இருந்ததுங்கறதை நாம நிரூபிக்கறோம். நமக்குப் பின்னாடியும் இருக்கணும். அதையும் நிரூபிக்க வைக்கணும். அதுக்கு குடும்பம், உறவுகளை விட சிறந்த பல்கலைக்கழகம் எதுவுமே இல்லை.

சரி விடுங்க. நீங்க சம்மர் டூர் எங்க போறீங்க.? கேட்டார் இவர்.

சிறிது நேர மௌனத்திற்குப் பின் சொன்னார் அவர்..

என் தலைமுறையை எம் பசங்களும் புரிஞ்சுக்கற இடத்துக்கு. நானும் புரிஞ்சுக் கணுமே...

வெளியேறும் போது அவர் மனதில் நிறைவு நடையிலேயே தெரிந்தது.

– லால்குடி வெ நாராயணன்

# மீம்ஸ் கலாட்டா



ஆன்லைன்ல டிரஸ்
வாங்காதன்னு சொன்னா
கேட்டாத்தானே..


*frnd
ஏன்டா எப்போ பாரு மீம்ஸ் share
பண்ணிக்கிட்டு இருக்க..
*me
4 பேரு சிரிக்கிறாங்கனா 40 memes share
பண்றதுல தப்பே இல்ல



ஆட்டம் முடிந்ததும்
ராஜாவும் சிப்பாயும்
ஒரே பெட்டியில்...
இவ்வளவுதான்
வாழ்க்கை...


Vera Level Comments
தேங்காய் சட்னியை கடைசியில் தாளித்து
சேர்ப்போம். அதற்கு பதிலாக அதே தாளித்த
பொருட்களை சட்னியில் சேர்த்து அரைத்தால்
கூடுதல் சுவையுடன் இருக்கும்.
Gazai Mesividal
நான் தென்னை மரத்தின் கீழேயே
தினமும் ஒரு கரண்டி தாளித்து
கொட்டி விடுவேன். சட்னி
அரைக்கும் போது தாளிக்க
வேண்டியது இல்லை
6h Like Reply 5

# கேள்வியை நாங்கள் கேட்கிறோம் பதிலை நீங்கள் சொல்லுங்கள்




தமிழ்நாடு இ பேப்பர்.காம் வழங்கும் சூப்பரான பரிசை வெல்லுங்கள்...!





தினமும் வெளிவரும் நமது

## தமிழ்நாடு இ பேப்பர்.காம்

இணையதள நாளிதழை தொடர்ந்து படியுங்கள், தினமும் நாளிதழில் வெளிவரும் செய்திகள் குறித்து கேள்வி கேட்கப்படும், சரியான பதிலை கீழ்காணும் வாட்சப் எண்ணிற்கு அனுப்பிவைத்தால் குலுக்கல் முறையில் அற்புதமான பரிசுகள் வழங்கப்படும்.

**Whatsup no.8122664699**


சுடச்சுட செய்திகளை
அதிகாலை வேலையில்
தெரிந்துகொள்ள
தமிழ்நாடு
இ பேப்பர்.காம்
தமிழ்நாடு
இ/பேப்பர்
படியுங்கள்

# மீம்ஸ் கலாட்டா


உங்க மாமியார் உன்னட்ட
"Tea" போட தெரியுமா'னு
கேட்டதுக்கு
நீ என்ன சொன்ன?
f /alwzsmle
capital "T" யா? small "t" யா
தான் சார் கேட்டேன்..


இப்ப புஷ்பா புருஷன விட
#MHD_Memes
BIGG BOSS MEMES
அனிதா புருஷன் தான் Trending


நல்ல வேல இந்த போட்டோ
பீட்டாகாரன் கண்ணுல படல..
@MVGmeme
MVG MEME
இல்லேன்னா கொழந்தைய
விட்டு மாட்ட கடிக்க வச்சி
கொடுமைபடுத்துறாங்கன்னு
கெளப்பி விடுவான்..


நான் வெளிநாடுக்கு போனா நீ
என்னம்மா பண்ணுவேன்னு
பொண்டாட்டி கிட்ட கேட்டா..
ஒரு டம்ளர் அரிசி கம்மியா
போடுவேன்னு சொல்லி
அனுப்புறா...

# பார்வையின் நிறங்கள்




பரபரப்பான சென்னை, பாண்டி பஜாரில் தங்கள் மகிழுந்தை நிறுத்திவிட்டு இறங்கினர் ஒரு தம்பதியினர்.

அந்தப் பெண்மணி இறங்கும் போது, தரையில் புரளும் படி அணிந்திருந்த புடவை கால் பாதத்தின் கீழ் மடங்கிக் கொண்டது.

நிலைத் தடுமாறினார்.

"இருங்க ஒரு நிமிஷம். புடவையை சரி செய்துக் கொள்கிறேன்." என்றுக் கூறி விட்டு புடவையை தூக்கிச் செறுகி சரி செய்து கொண்டாள்.

"இதுக்கு தான் புடவை கட்டிக்கொண்டு வராதே என்றேன். வெளியே வரும் போது சுடிதார் போட்டுக் கொள் என்கிறேன்."

"ஏங்க.. புடவை தாங்க அழகு. அதுவும் இந்தப் புடவையில் கடைக்குப் போனால் எப்படி மரியாதை இருக்கு என்றுப் பாருங்கள்."

"அழகா சக்தியின் உருவமா அம்சமா இருக்க என்று உன்னை வரவேற்பார்கள். அப்படித் தானே..

சரி..சரி.. வா போகலாம்." என்றார் அவர் கணவன்.

அப்பொழுது அங்கு வந்த ஊனமுற்றவர் ஒருவர், ஒற்றைக் காலுடன் கம்பு ஊன்றி நடந்து வந்தார். அவர் கண்களில் தயக்கம்.

இருந்தாலும் அவர்களிடம் தன் கையில் உள்ள புத்தகத்தைக் காட்டினார்.

"ஐயா..! இந்த நூல் 30 ரூபாய் தான். என் வாழ்க்கை வரலாறு. கட்டாயம் அனைவரும் தெரிந்துக் கொள்ள வேண்டியது. வாங்கிக் கொள்கிறீர்களா?"

"எங்களுக்கு எதற்கு உங்க கதை?

கால்வேற இல்லை. குடிச்சிட்டு வண்டிஓட்டி விபத்து ஏற்பட்டதோ என்னவோ தெரியல." என்று அனலாக வார்த்தைகளைக் கொட்டினாள் அந்தப் பெண்மணி.




"அலமேலு.. எதற்கு இப்படி பேசற..! விடு. எங்களுக்கு வேண்டாம்" என்று கூறி விட்டு நகர்ந்தார்.

"உங்களுக்கு என்ன தெரியும்?

அந்தப் பக்கம் போனதும் மகிழுந்தை திறந்து ஏதாவது கிடைக்குமா என்று பார்த்து திருடு வாங்க. பெரிய கும்பலே இருக்கும். நம் மளைப் பார்த்து பெரிய இடம் என்று நினைத்து வந்திருப்பார்." என்று கணவரிடம் கூறினாள்.

" போங்க அந்தப் பக்கம். எங்கப் போனாலும் திருடுதற்கு என்று ஒரு கும்பல்..!" விரட்டினாள்.

சுடு சொற்களைக் கேட்டும் ஏதும் பேசாமல் நின்றார் ஊனமுற்ற நபர். அவர்கள் அங்கிருந்து நகர்ந்ததும், சிறிது நேரம் அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

திரும்பிப் பார்த்த அலமேலு"பாருங்க. அங் கேயே உட்கார்ந்து நாம் போவதையே பார்த்துக் கொண்டு இருக்கிறான்."

அவர்கள் கடையின் உள்ளே சென்றதும் அவர்கள் மகிழுந்தின் அருகில் வந்தார். தூரத் தில் இருந்து பார்த்த போது ஏதோ சக்கரத்தின் அடியில் இருப்பது தெரிந்தது. சந்தேகமாக இருந்தது. ஏதாவது கூறப் போக அந்த அம்மா கத்தி ஊரைக் கூட்டினால் என்று செய்வது?

அவர்களின் சொகுசு மகிழுந்தின் சக்கரத் தின் அருகில் ஒரு அலைபேசி. ரொம்ப சிரமப் பட்டு எடுத்துப் பார்த்தார். போனில் இருந்த படத்தைப் பார்த்து அந்தக் காரில் வந்த பெண்மணியின் போன் என்று உறுதி செய்துக் கொண்டார்.

தன்னிடம் உள்ள ஒரு பையில் போனை வைத்து, அதைக் காரின் கதவில் உள்ள கைப் பிடியில் தன் புத்தகத்துடன் வைத்துக் கட்டி விட்டு சற்றுத் தொலைவில் சென்று அமர்ந்து கொண்டார்.

கடைக்குச் சென்ற பெண்மணி சிறிது நேரம் சென்ற பின்னர்கையில் இருந்த அலைபேசி யை காணவில் லை என்று உணர்ந்தாள். தெரிந்ததும் காருக்கு விரைந்து வந்தார். அவர் கணவரும் உடன் திரும்பினார்.

கார் கைப்பிடியில் இருந்த பையில் அலைபேசி, புத்தகம், அத்து டன் கிடைத்த விபரம் எழுதிய கடிதத்தையும் பார்த்து விக்கித்து நின்றனர்.

காரில் இருந்து இறங்கும் போது மடியில் வைத்து இருந்த செல்போன் கீழே விழுந்து இருக்கிறது.

'சிப்பாயின் வாழ்க்கையில் இருந்து..!' என்ற தலைப்பில் அழகான வண்ணப் படத்துடன் புத் தகம் இருந்தது. அலமேலு புத்தகத்தை புரட்டிப் பார்த்தார்.

ஆசிரியர் உரையில்

'சிப்பாய்கள் நாட்டை எவ்வாறு தங்கள் உயிரைக் கொடுத்து காப்பாற்றுகின்றனர் என்பதை எடுத்துக் கூறுவதும், தேசப் பற்றை மக்களிடையே கொழுந்து விட்டு எரியச் செய்வதும் இந்தப் புத்தகத்தின் நோக்கம். இந்தப் புத்தகம் விற்றுப் பெறப்படும் தொகை போர் வீரர்கள் நிதிக்கு அனுப்பப்படுகிறது. 'ஜெய்ஹிந்த்' என்று முடித்து இருந்தார்.

அவர்கள் கண்கள் அந்த மனிதரைத் தேடி யது.

பச்சைக் கண்ணாடி போட்டுக் கொண்டு உலகைப் பார்த்தால் அனைத்தும் பச்சை நிறம். மனிதர்களை தோற்றத்தை வைத்து எடை போடக் கூடாது என்று உணர்ந்து கூனிக் குறுகி நின்றார் அந்தப் பெண்மணி.

"பாவம் அந்த மனிதர். அவர் போரில் தன் காலை இழந்துள்ளார். அவரை நான் மோச மாக பேசி விட்டேனே..இந்த புத்தகத்தை நாம் மொத்தமாக வாங்கி அனைவருக்கும் இலவச மாகக் கொடுப்போம். அதுதான் அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்." என்றுக் கூறிக் கொண்டே கணவனுடன் அங்கிருந்து புறப்பட்டார் அந்தப் பெண்மணி.

– ருக்மணி வெங்கட்ராமன்
சென்னை





# மீண்டும் பிறந்துள்ளாரா?
# முதலாம் மான்சிங்

ராஜஸ்தான் மாநிலத்தில் 10 வயது சிறுவன் ஒருவன், தான் முற்பிறவியில் ஆம்பர் (ஆமேர்) கோட்டையை ஆண்ட புகழ்பெற்ற மன்னர் முதலாம் மான்சிங் என்று கூறி வருவது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

டோங்க் மாவட்டத்தைச் சேர்ந்த 5ஆம் வகுப்பு மாணவனான கன்ஹாராம் பைர்வா (10), தனது முற்பிறவி நினைவுகள் குறித்துப் பேசி அந்தப் பகுதியையே ஆச்சரியத்தில் ஆழ்த்தி யுள்ளார்.

சிறுவனின் பெற்றோர் கூறுகையில், அவ னுக்கு இரண்டரை வயதிலிருந்தே மாற்றங்கள் தெரிய ஆரம்பித்ததாகத் தெரிவிக்கின்றனர்.

அவனது தாய் கியார்சி தேவி கூறுகையில், சிறுவன் முதன்முதலில் பேசிய வார்த்தையே 'ராஜா மான்சிங்' என்பதுதான் என்றும், அவன் தன்னை ஒரு ராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்த மன்னராகவே கருதி சாதாரண பாத்திரங்களில் உணவு உண்ண மறுப்பதோடு, வீட்டில் சிம்மா சனம் அமைத்து அமர்ந்து வருவதாகவும் நெகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

ஆம்பர் கோட்டையில் மறைத்து வைக்கப்பட் டுள்ள புதையல்கள் மற்றும் புகழ்பெற்ற சிலாதேவி கோயிலின் வரலாறு குறித்து அச்சிறுவன் கூறும் தகவல்கள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

தான் ஹல்திகாட்டி போரில் போரிட்டதாகவும், சிலாதேவி சிலையை வங்காளத்திலிருந்து கொண்டு வந்ததாகவும் அவன் கூறுகிறான்.

இருப்பினும், மன்னர் மான்சிங் இறந்த இடம் குறித்த அவனது கூற்றுக்கும் வரலாற்றுத் தரவுகளுக்கும் இடையே சில முரண்பாடுகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின் றனர்.

# தெரிந்து ஓடவைக்கும்
# விமானப் பயணம்




விமானத்தில் போறதுன்னா நாம பெரிய VIPன்னு feel பண்ணிக்கிட்டு airportக்கு போவோம்.

ஆனா gateக் குள்ள போனவுடனே reality slap அடிக்கும்.

"Early check-in"ன்னு சொல்லி 3 மணி நேரத்துக்கு முன்னாடி வரச்சொல்வாங்கஞ்

நாம punctualஆ போனதுக்கு reward — plastic chairô meditation பண்ணனும்.

Security check வந்ததும்ஞ்

Pocketல இருந்த 5 ரூபாய் coin கூட dangerous item மாதிரி எடுத்துடுவாங்க.

Belt remove, watch remove, shoes remove…wallet remove, mobile, laptop, charger, perfume, powder முதற்கொண்டு எடுத்துடுவாங்க.

Sir, 2 kg extra ன்னு சொன்னவுடன்

நம்ம lifeல first time dress change publicஆ நடக்கும்

Jeans, jacket எல்லாம் bodyல போட்டு weight adjust பண்ணுவோம்!

Security checkல…


நம்மள terrorist மாதிரி scan பண்ணுவாங்க

ஆனா நாம carry பண்ணுறது biscuit packet தான்

Boarding gateல wait பண்ணுறது தான் next level. முன்னாடியே போய் வெயிட் பண்ணுவோம் திடீர்னு Gate change nu announcement வரும் அடிச்சி பிடிச்சி அந்த கேட்க்கு ஓடனும்..

அப்பாடா வந்துட்டோம்னு நினைச்சா Announcement வரும்: "Flight delayed due to operational reasons."

அது என்ன reasonன்னு கேட்க முடியாதுஞ்




ஆனா coffee ₹300க்கு வாங்கணும்.

ஒரு வழியா உள்ள போய் Seat number தேடுறது treasure hunt மாதிரி இருக்கும்.

Window seat வாங்கினா

Instagramல cloud photo மேக கூட்டங்கள வீடியோ எடுத்து போடலாம்னு நினைப்போம்

ஆனா wing தான் full screen ல நிக்கும்.

Takeoff ஆகும்போதுஞ்

நம்ம confidence level: "Machan, flight la travel panren da செம்மயா இருக்குடானு சந்தோசத்துல துள்ளுவோம் அடுத்த 15

நிமிஷத்துக்கு அப்புறம் turbulence வந்ததும்ஞ்

"அம்மா தாயே நல்லபடியா ஊர் கொண்டு வந்து சேர்த்தீனா உனக்கு பொங்கல் வச்சு படையல் வைக்கிறேனு குல தெய்வத்துல இருந்து இஷ்ட தெய்வம் வரைக்கும் வேண்ட ஆரம்பிச்சுருவோம்.

Air hostess வந்து smile பண்ணி:

"Veg or Non-veg?"

நாம: "Ticketô freeù£ anything ok madam"

Food open பண்ணினாஞ்

Bread rubber மாதிரி இருக்கும்

Butter stone மாதிரி இருக்கும்

ஆனா price பார்த்தா 5 star hotel level.

Landing ஆகும்போது tyre touch ஆனதும்ஞ் தான் ஒரு நிம்மதி பெருமூச்சே வரும்..

Luggage beltலஞ்

எங்க bag மட்டும் VIP entry மாதிரி lastல வரும்.

அதுவரைக்கும் நாம belt சுத்துறதையே பாத்து life meaning யோசிப்போம் ..

மத்தவங்க பேக் மூனு ரவுண்ட் அடிச்சிட்டு இருக்கும்... இன்னும் நிறைய இருக்கு




# நிலவில் ப்ளாட் ரெடி

## 13,331,000 டாலருக்கு நிலம் விற்று சாதித்த

# ரியல் எஸ்டேட்




சமீபத்தில் விவாகரத்து பெற்ற ஒரு மனிதர், அவரிடம் பணம் இல்லை, வருமானம் ஈட்டுவதற்கான வழிகளைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார். சொத்துகளை வாங்கி வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிக்கலாம் என்று அவர் நினைக்கிறார். பின்னர் ஒரு நாள், ஜன்னலுக்கு வெளியே பார்க்கும்போது திடீரென அவருக்கு, "அருமை! நான் நிலவை விற்றுவிடுகிறேன்" என்றொரு யோசனை தோன்றுகிறது.

இந்த யோசனை விசித்திரமாகவோ அல்லது நம்ப முடியாத ஒன்றாகவோ தோன்றக்கூடும். ஆனால், 1980ஆம் ஆண்டில் டென்னிஸ் ஹோப் என்ற அமெரிக்கர் சரியாக




இதைத்தான் யோசித்ததாகக் கூறியுள்ளார். இந்த யோசனை தோன்றிய பிறகு, அவர் நிலவில் உள்ள தரைப் பகுதிகளை விற்று ஒரு கோடீஸ்வரரானார்.

அவரால் எப்படி இதைச் செய்ய முடிந்தது?

சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களில் உள்ள "சட்டரீதியான தெளிவற்ற பகுதிகளை" பயன்படுத்தி அவர் இதைச் செய்துள்ளார்.

அதாவது, நிலவின் உரிமையாளர் யார் என்பது குறித்து சட்டங்கள் தெளிவாக இருக்கவில்லை. எனவே அவர் இந்தக் குழப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்.

அதோடு, இந்த அசாதாரணமான யோசனையை அவர் மிகுந்த திறமையுடன் வெற்றிகரமான தொழிலாக மாற்றினார்.

இந்த விசித்திரமான யோசனை தோன்றிய பிறகு, இது உண்மையில் சாத்தியமா என்பதை அறிய டென்னிஸ் ஹோப் முடிவு செய்தார். 'வைஸ்' (Vice) ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், தான் ஒரு நூலகத்திற்குச் சென்று, '1967 ஆம் ஆண்டின் விண்வெளி ஒப்பந்தம்' என்ற ஆவணத்தைத் தேடியதாக அவர் கூறினார்.

இந்த ஒப்பந்தம் ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்ட ஒரு விதியாகும். விண்வெளி என்பது உலகில் அனைவருக்கும் சொந்தமானது என்று இது கூறுகிறது. விண்வெளியை "மனிதகுலம் அனைத்துக்குமான சொத்து" என்று இது விவரிக்கிறது. அதாவது, எந்தவொரு தனி நாடும் இதற்கு உரிமை கொண்டாட முடியாது.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால், இந்த ஒப்பந்தத்தின் 2வது பிரிவு "நிலவு மற்றும் பிற வான்பொருட்கள் மீது, இறையாண்மை கோருவதன் மூலமோ, பயன்பாடு அல்லது ஆக்கிரமிப்பு மூலமோ, அல்லது வேறு ஏதேனும் வழிகள் மூலமோ, எந்தவொரு நாடும் உரிமை கொண்டாட முடியாது." என்று கூறுகிறது.

ஆனால் ஹோப் இந்த விதியை முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் புரிந்துகொண்டார். அவர், "இது அனைவருக்கும் சொந்தமானது என்றால், உண்மையில் இது யாருக்குமே சொந்தமானது அல்ல. நாடுகளால் இதற்கு உரிமை கொண்டாட முடியாது என்றால், ஒரு தனிநபரால் உரிமை கொண்டாட முடியுமோ?" என்று சிந்தித்தார்.

இதுகுறித்து அவர் பேசியபோது, "உரிமையாளர் இல்லாத நிலமாக அது இருந்தது," என்று கூறினார்.

எனவே இந்த யோசனையின் அடிப்படையில், அவர் நிலவிலுள்ள நிலத்தைத்




தனக்கே உரியதாகக் கோர முடிவு செய்தார். இதை அவர், "ஐரோப்பாவில் இருந்து புதிய உலகத்திற்கு வந்தபோது நம் முன்னோர்கள் செய்ததைப் போன்றதுதான்" என்று குறிப்பிட்டார்.

அடுத்த பெரிய கேள்வி, ஒருவரால் நிலவை உண்மையில் எப்படி "சொந்தம் கொண்டாட" முடியும்?

மீண்டும் ஒருமுறை, அமைப்பில் இருந்த ஓர் இடைவெளியைப் பயன்படுத்தி, அதாவது, யாரும் தெளிவாக 'ஆம்' என்றோ அல்லது 'இல்லை' என்றோ பதிலளிக்காத ஒரு சூழலைப் பயன்படுத்தி, ஹோப் ஒரு தந்திரமான வழியைக் கண்டறிந்தார்.

நிலவுக்கும், பூமி தவிர சூரிய மண்டலத்தில் உள்ள பிற எட்டு கோள்களுக்கும், அவற்றின் துணைக் கோள்களுக்கும் (நிலவுகளுக்கும்) உரிமை கோரி அவர் ஐக்கிய நாடுகள் சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். அந்தக் கடிதத்தில், நிலவிலுள்ள நிலத்தைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து மக்களுக்கு விற்கத் திட்டமிட்டு இருப்பதாக அவர் விளக்கினார். இதில், ஏதேனும் சட்டச் சிக்கல்கள் இருந்தால், அதுகுறித்து தனக்குத் தெரிவிக்குமாறும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த யாரும் அவருக்குப் பதிலளிக்கவே இல்லை. அதாவது, யாரும் அதிகாரபூர்வமாக எதிர்ப்பு தெரிவிக்காததாலும், அவரைத் தடுக்காததாலும், அவர் தனது திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார்.

அதன் பிறகு, டென்னிஸ் ஹோப், நிலவிலுள்ள நிலப் பகுதிகளை 'ஹெக்டேர்' எனப்படும் நில அளவீட்டு அலகுகளில் கணக்கிட்டு விற்பனை செய்தார். அவர் நிலவுடன் மட்டுமே நின்றுவிடவில்லை. செவ்வாய், வெள்ளி மற்றும் புதன் போன்ற பிற கோள்களிலும் நிலம் விற்பனை செய்யத்









தொடங்கினார்.

பலதரப்பட்ட மக்களும் நிறுவனங்களும் இந்த "நிலங்களை" வாங்கியுள்ளனர். இவர்களில் ஹாலிவுட் நட்சத்திரங்கள், ரொனால்ட் ரீகன் மற்றும் ஜிம்மி கார்டர் போன்ற மறைந்த முன்னாள் அமெரிக்க அதிபர்கள், ஹில்டன், மேரியட் போன்ற பெரிய ஹோட்டல் நிறுவனங்களும் அடங்குவர். ஜார்ஜ் டபிள்யு. புஷ்ஷுக்கும் நிலவில் ஒரு நிலப்பகுதி சொந்தமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து கடந்த 2007ஆம் ஆண்டில் மீடியாவிடம் பேசிய ஹோப், தான் தினமும் சுமார் 1,500 ப்ளாட்டுகளை (plots) விற்பனை செய்வதாகத் தெரிவித்தார். எந்த நிலத்தை விற்பனைக்குத் தேர்வு செய்வது என்பதற்கான தனது வழிமுறையையும் அவர் விளக்கினார். நிலவின் வரைபடத்தைப் பார்த்து, கண்களை மூடிக்கொண்டு தனது விரலால் ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி, அந்த நிலத்தைத் தேர்வு செய்வதாக அவர் கூறினார்.

"இது அறிவியல்பூர்வமான முறையல்ல, ஆனால் மிகவும் சுவாரஸ்யமானது" என்று அவர் ஒப்புக்கொண்டார்.

இந்தத் தொழில் மிகவும் சுவாரஸ்யமானதாகவும், அதேநேரம் மிகுந்த லாபம் தரக்கூடியதாகவும் தோன்றுகிறது. இதன் மூலம் அவர் சுமார் 12 மில்லியன் அமெரிக்க டாலர்களை ஈட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. மேலும் 1995ஆம் ஆண்டில் இருந்து இதுவே தனது ஒரே தொழில் என்றும் அவர் கூறுகிறார்.

அவர் செவ்வாய் கோளிலும் நிலங்களை விற்பனை செய்கிறார். வாங்குவோருக்கு உரிமையாளர் என்பதற்கான சான்றாக ஓர் ஆவணத்தையும் (உரிமைப் பத்திரம்) வழங்குகிறார்.

வைஸ் ஊடகத்திடம் அவர் பேசியபோது, "எங்களிடம் இருந்து நீங்கள் வாங்கக்கூடிய மிகச்சிறிய நிலப்பகுதி ஒரு ஏக்கர். நாங்கள் விற்பனை செய்யும் மிகப்பெரிய நிலப்பகுதி 'ஒரு கண்டம் அளவிலான' நிலப்பகுதி என்று அழைக்கப்படுகிறது. இது 5,332,740 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இதன் விலை 13,331,000 அமெரிக்க டாலர்கள் ஆகும்," என்று விளக்கினார்.

மேலும் அவர், "அந்தப் பெரிய நிலப்பகுதிகள் எதையும் நாங்கள் இதுவரை விற்பனை செய்யவில்லை. ஆனால் 1,800 மற்றும் 2,000 ஏக்கர் அளவிலான பல நிலங்களை விற்பனை செய்துள்ளோம். ஹில்டன், மேரியட் ஹோட்டல் நிறுவனங்கள் உள்பட, உலகம் முழுவதும் உள்ள சுமார்




1,800 பெரிய நிறுவனங்கள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக எங்களிடம் இருந்து நிலங்களை வாங்கியுள்ளன," என்றார்.

இந்தத் தொழில் எவ்வாறு தொடர்ந்து நடைபெறுகிறது, வாங்குபவர்கள் தங்கள் "நிலம்" திடீரெனப் பறிக்கப்படாது என்பதில் எவ்வாறு உறுதியாக இருக்கிறார்கள் என்பன குறித்து நீங்கள் வியக்கக்கூடும்.

டென்னிஸ் ஹோப் மற்றும் அவரிடம்இருந்து நிலம் வாங்கியமக்களுக்கும் இதே கவலை இருந்தது. எனவே, இதைக் கையாள்வதற்கு அவர்கள் ஒரு யோசனையைக் கண்டறிந்தனர்.

அவர்கள் "கேலக்டிக் அரசாங்கம்" (Galactic Government) எனப்படும் ஒரு வகையான அரசாங்கத்தை உருவாக்கியதாகவும், அதை ஒரு ஜனநாயக குடியரசாக விவரித்ததாகவும் ஹோப் விளக்கினார்.

"அரசியலமைப்பை வரைவு செய்ய எங்களுக்கு மூன்று ஆண்டுகள் எடுத்தது. மார்ச் 2004இல் நாங்கள் அதை இணையத்தில் வெளியிட்டோம். அப்போது எங்களிடம் 3.7 மில்லியன் சொத்து உரிமையாளர்களும், அந்த அரசியலமைப்பை அங்கீகரிப்பதற்காகப் பதிவான 173,562 வாக்குகளும் இருந்தன.

எனவே, இப்போது முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட அரசியலமைப்பைக் கொண்ட ஓர் இறையாண்மை மிக்க தேசமாக நாங்கள் திகழ்கிறோம்," என்று அவர் விளக்கினார்.

அதாவது, அவர்கள் தங்களுக்கென ஓர் அரசியலமைப்பை உருவாக்கிக் கொண்டதாகவும், மக்கள் வாக்களிப்பதன் மூலம் அதற்கு ஒப்புதல் பெற்றதாகவும், இப்போது தங்களை ஒரு சுதந்திர தேசமாகக் கருதிக் கொள்வதாகவும் அவர் கூறுகிறார்.

மேலும் அவர், "தற்போது உலகம் முழுவதும் உள்ள 30 அரசுகளுடன் நாங்கள் ராஜதந்திர உறவுகளைப் பேணி வருகிறோம். இயன்றவரை அதிகமான அரசுகள் எங்களை அங்கீகரிக்க வேண்டுமென நாங்கள் முயன்று வருகிறோம். ஏனெனில், சர்வதேச நாணய நிதியத்தில் இணைவதே எங்கள் நோக்கம்," என்றும் கூறினார்.

அன்றாடச்
செய்திகளை
துல்லியமாக
தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com










எந்தவித
மறை முக
கட்டணமும் இல்லை
சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,
உங்கள் பகுதியில் நடைபெறும்
நிகழ்ச்சிகளை எங்களுக்கு
தெரியபடுத்துங்கள், நமது
இ-பேப்பரை படித்து
பயன்பெறுங்கள்,
Whatsup no.8122664699

TamilnaduEpaper.com






# தென் அமெரிக்காவில் தேடிக் கண்டுபிடித்த பேய்ப் பறவை

19 மார்ச் 2026 வாசிக்கும் நேரம்: 3 நிமிடங்கள், மௌரிசியோ சில்வெரா பறவை களைக் கவனிப்பதை மிகவும் விரும்புவதால், ஒரு முக்கியமான கோல் விழுந்த பிறகு கால்பந்து ரசிகர் எப்படி உற்சாகத்துடன் கத்து வாரோ அந்த உணர்வுடன் தனது உணர்வை ஒப்பிடுகிறார்.

அவரைப் பொறுத்தவரை, இதுவொரு தகவல், ஓர் இடம் அல்லது ஒரு புகைப்படம் கிடைப்பதில் தொடங்குகிறது. அதன் பிறகு ஓர் அரிய பறவையைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

அவர் பல விஷயங்களை பற்றிச் சிந்திக்க வேண்டும் மற்றும் வெவ்வேறு சாத்தியக் கூறுகளைக் கணக்கிட வேண்டும். ஏனெனில், அனைத்தும் மாறக்கூடும், மேலும் அவருடைய எல்லா முயற்சிகளும் இறுதியில் பயனற்றதாகிவிடலாம்.

பின்னர் இறுதியில் அவர் அந்தப் பறவை யைக் கண்டுபிடித்து, அதன் ஒலியைக் கேட்டு, அதைப் புகைப்படம் எடுத்து, அதை இன்னும் நன்றாகப் புரிந்துகொண்டார்.



"என்ன செய்வதெனத் தெரியாமல், கத்துவதா, புகைப்படம் எடுப்பதா அல்லது யாரிடமாவது சொல்வதா என்று நெஞ்சில் ஒருவித பதற்றம் ஏற்படுகிறது" என்று 24 வயதான உருகுவேவை சேர்ந்த அந்த உயிரியல் மாணவர் கூறுகிறார்.

பறவைகளைக் கவனிப்பதில் அவர் ஏற்கெனவே மிகவும் திறமையானவராகவும் அனுபவம் வாய்ந்தவராகவும் இருக்கிறார்.

மேலும் அவர், "இது கிட்டத்தட்ட பூகிமேனை தேடுவதைப் போலவும், உங்களால் எத்தனை சிறிய பறவைகளைக் கண்டுபிடிக்க முடியும், நீங்கள் மிகவும் அரிதான ஒன்றைக் கண்டுபிடிக்கிறீர்களா எனப் பார்ப்பது போலவும் இருக்கிறது" என்று கூறுகிறார்.

24 வயதான மௌரிசியோ சில்வெரா, அமெரிக்க கண்டங்களில் மட்டுமே காணப்படும், உருமறைப்புத் திறன் கொண்ட 'உருடாவ்' (Urutaú) பறவையைத் தேடி வருகிறார்

தற்போது சில்வெரா தனது கேமரா உபகரணங்களுடன் ஒரு சிறப்புப் பணிக்காக வடக்கு உருகுவேக்கு 650கி.மீ பயணம் செய்கிறார். அந்தப் பணி, புகழ்பெற்ற உருடாவ் பறவையைக் கண்டுபிடித்து புகைப்படம் எடுப்பதாகும்.

உருடாவ் என்பது தென் அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவில் காணப்படும் ஓர் இரவாடிப் பறவையாகும். இந்தப் பகுதி களின் பல கிராமப்புரங்களில், இது பல புராணங்களுக்கும் கட்டுக் கதைகளுக்கும் உத்வேகம் அளித்துள்ளது.

இதற்கு மிகப்பெரிய வாயும், மரப்பட்டை போன்ற பழுப்புசாம்பல் நிற இறகுகளும் உள்ளன. இது மர உச்சிகளிலோ அல்லது காய்ந்த கிளைகளிலோ எளிதில் மறைந்து கொள்ள உதவுகிறது.

ஆனால், இதைப் பற்றிய மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம், அதன் மிகப்பெரிய மஞ்

சள் நிறக் கண்கள்தான்.

பகல் நேரத்தில், இது அசையாமல் மரங்கள் அல்லது வேலிக் கம்பங்களில் மறைந்து கொள் கிறது. இரவில், இது பூச்சிகளை வேட்டையாட வெளியே வருகிறது.


சில்வெரா சிறு வயது முதலே பறவை களில் ஆர்வம் கொண்டிருந்தார்பட மூலாதாரம், MAURICIO SILVERA படக்குறிப்பு,சில்வெரா சிறு வயது முதலே பறவைகளில் ஆர்வம் கொண்டிருந்தார்

இதன் அறிவியல் பெயர் நைக்டிபியஸ் கிரிசியஸ் (Nyctibius griseus).

உருகுவேவில் இது உருடாவ் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் பிற நாடுகளில், மக்கள் இதை குச்சிப் பறவை, பேய்ப் பறவை, சூனியக்கார பறவை, போட்டு மற்றும் பிற பெயர்களில் அழைக்கிறார்கள்.

"இதற்கு ஒரு நம்ப முடியாத வகையிலான குரல் உள்ளது. அது நள்ளிரவில் ஓர் ஓலம் போல் ஒலிக்கும். மேலும் பலருக்கு அது ஒருவர் அழுவது போல் இருக்கும். இரவில் அதைக் கேட்டால், அது மிகவும் திகிலூட்டுவதாக இருக்கும். இது ஓர் அரக்கனைப் போலத் தோற்றமளிப்பதால் மக்கள் இதைப் பற்றி மீம்களை உருவாக்குகிறார்கள்," என்கிறார் சில்வெரா.

காட்டுயிர்களைப் பாதுகாக்கப் பணியாற்று வோர், அந்தப் பறவை தீங்கற்றது எனக் கூறுகிறார்கள். சில நாட்டுப்புறக் கதைகள் அதற்கு ஓர் எதிர்மறையான பிம்பத்தை ஏற் படுத்தியிருப்பதால், அந்த இனத்தை மதித்துப் பாதுகாக்குமாறு அவர்கள் மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.








# கலப்படப் பாலை கண்டுபிடிப்பது எப்படி?

பாலில் கலப்படம் செய்யப்படுவது என்பது ஒரு தீவிரமான பிரச்னையாகும்.

சில வியாபாரிகளும் விற்பனையாளர்களும் லாபத்திற்காக, பாலில் தண்ணீரை மட்டும் கலக்காமல், அது அடர்த்தியாகத் தெரிவதற்காகத் தரம் குறைந்த அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்களைச் சேர்ப்பதாகப் புகார்கள் உள்ளன.

சமீபத்தில் ஆந்திராவின் ராஜமுந்திரியில் வெளிச்சத்திற்கு வந்த பால் கலப்பட சம்பவம் பொதுமக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆரோக்கியத்திற்கு உகந்தது எனக் கருதப் படும் பால் இறுதியாக நம் கைகளை வந்தடையும் போது, அதன் தரம் குறித்த சந்தேகங்கள் எழு கின்றன.

அத்தகைய சூழலில், பாலில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதா என்பதை நாம் எவ்வாறு கண்டறியலாம்? வீட்டிலேயே என்னென்ன சோத னைகளைச் செய்யலாம்? போன்றவை குறித்து தெரிந்துகொள்வதற்காக இந்திய உணவு



பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய (எப்எஸ்எஸ்ஏஐ) அதிகாரிகள் மற்றும் பால் பண்ணை துறையில் பணியாற்றுபவர்களிடம் பிபிசி பேசியது.

ஆரோக்கியத்திற்கு உகந்தது எனக்



கருதப்படும் பால் இறுதியாக நம் கைகளை வந்தடையும் போது, அதன் தரம் குறித்த சந்தேகங்கள் எழுகின்றன.

'பால் ஒரு சத்தான திரவ உணவு. இது குழந்தைகளுக்கான ஊட்டச்சத்தின் முக்கிய ஆதாரமாகும். உடல் வளர்ச்சிக்கு அவசியமான புரதங்கள், கொழுப்புகள் மற்றும் கால்சியம் போன்ற ஊட்டச்சத்துக்கள் பாலில் உள்ளது.

பாலில் கலப்படம் செய்வது என்பது ஒரு தீவிரமான பிரச்னை. முக்கியமாக அதிகப் பணம் ஈட்ட வேண்டும் என்பதற்காக, தரம் குறைந்த அல்லது தீங்கு விளைவிக்கும் பொருட்கள் பாலில் சேர்க்கப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தும் இந்த நடைமுறைகளை 'உணவு மோசடி' என்று கருதலாம்" என்று எப்எஸ்எஸ்ஏஐ துணை இயக்குநர் சுரேஷ் உப்பரபள்ளி தெரிவித்தார்.

பால் கலப்படம் பல வழிகளில் நிகழலாம் என்றும், சில எளிய சோதனைகள் மூலம் யார் வேண்டுமானாலும் அதைக் கண்டறிய முடியும் என்றும் சுரேஷ் உப்பரப்பள்ளி கூறினார்.

பாலில் தண்ணீர், யூரியா, டிடர்ஜென்ட்கள், ஃபார்மலின், ஹைட்ரஜன் பெராக்சைடு போன்றவை சேர்க்கப்படுகின்றன என கூறும் அவர், பால் கலப்படம் பல வழிகளில் நிகழலாம் என்றார்.

'பாலின் அளவை அதிகரிக்க தண்ணீர் சேர்க்கப்படுகிறது. இது பாலை குறைவான அடர்த்தி



உடையதாக மாற்றி சுவையைக் குறைக்கிறது. இதை மறைக்க, பாலில் சிறிதளவு ஸ்டார்ச், சர்க்கரை மற்றும் உப்பு சேர்க்கப்படுகின்றன.'

'பால் விரைவில் கெட்டுப் போகாமல் இருக்க ஃபார்மலின் மற்றும் ஹைட்ரஜன் பெராக்சைடு சேர்க்கப்படுகின்றன. இது பால் நல்ல நிறம் மற்றும் நறுமணத்துடன் ஃபிரெஷாக தோன்றுமாறு செய் கிறது.'

'ஆய்வகச் சோதனையில் புரதம் அதிகமாகத் தெரிவதற்காக யூரியாவும், கொழுப்புச் சத்து அதிகமாகத் தெரிவதற்காக மலிவான எண் ணெய்களும் சேர்க்கப்படுகின்றன. ஆனால் இவை இயற்கையான புரதங்களோ அல்லது கொழுப்புகளோ அல்ல.'

'பால் அதிக அடர்த்தியாகவும், இயற்கையான நுரை சற்று அதிகமாகவும் இருப்பது போல் தோன்றுவதற்காக டிடர்ஜென்ட்கள் சேர்க்கப் படுகின்றன.'

பால் கலப்படம் பல வழிகளில் நிகழலாம் என்றும், சில எளிய சோதனைகள் மூலம் யார் வேண்டுமானாலும் அதைக் கண்டறிய முடியும் என்றும் சுரேஷ் உப்பரப்பள்ளி கூறினார்.

பாலில் தண்ணீர் கலக்கப்பட்டுள்ளதா?: ஒரு தட்டில் அல்லது டைல்ஸ் மீது சிறிதளவு பாலை ஊற்றி கவனிக்கவும். தூய்மையான பால் அடர்த்தியாகவும் மெதுவாகவும் ஓடும். தண்ணீர் கலந்த பால் மிக வேகமாக ஓடிவிடும்.

பாலில் டிடர்ஜென்ட் சேர்க்கப்பட்டுள்ளதா?: ஒரு பாட்டிலில் சிறிதளவு பாலை எடுத்துக்கொண்டு, அதனுடன் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து குலுக்கவும். தூய்மையான பாலில் மெல்லிய மற்றும் குறைவான நுரையே உண்டாகும். டிடர்ஜென்ட் கலந்த பாலில் அதிக அடர்த்தியான நுரை உருவாகி நீண்ட நேரம் அப்படியே இருக்கும்.

பாலில் ஸ்டார்ச் சேர்க்கப்பட்டிருந்தால்...: குறைந்த அளவு பாலில் இரண்டு சொட்டு அயோடின் சேர்த்து கவனித்தால், தூய்மையான பாலின் நிறம் மாறாது. ஆனால் ஸ்டார்ச் கலந்த பால் நீலம் அல்லது கருப்பு நிறமாக மாறும்.

யூரியா சேர்க்கப்பட்டுள்ளதா?: பாலில் சிறிதளவு சோயாபீன் பவுடரைச் சேர்த்தால், தூய்மையான பாலின் மணம் மாறாது. ஆனால் யூரியா கலந்த பால் அம்மோனியா போன்ற வாசனையைத் தரும்.

செயற்கை பாலைக் கண்டறிய: உள்ளங்கையில் பாலை வைத்து தேய்க்கும் போது, தூய்மையான பால் மென்மையாகவும் இயற்கையாகவும் இருக் கும். செயற்கை அல்லது கலப்பட பால் சோப்பு போன்றும், வழுவழுப்புடனும், செயற்கையாகவும் தோன்றும். இவை ஆரம்பக்கட்ட அறிகுறிகள் மட்டுமே என்றும், உறுதியான முடிவுக்கு ஆய்வகப் பரிசோதனைகள் அவசியம் என்றும் சுரேஷ் உப்ப ரபள்ளி தெரிவித்தார்.

# சுடச்சுட செய்திகளை
## அதிகாலை வேலையில்
## தெரிந்துகொள்ள

# தமிழ்நாடு
## இ பேப்பர்.காம்

# தமிழ்நாடு இ/பேப்பர்
# படியுங்கள்

அரசியல்
நிகழ்வுகளை
விரல்நுனியில்
தரும்
ஒரே தரமான
நம்பர் 1
நாளிதழ்






# கைகேயி எனும் அற்புத தாய்

அயோத்தி விழாக்கோலம் பூண்டிருந்தது. பதினான்கு வருடம் கழித்து இராமபிரான் திரும்பி வந்திருப்பதும் அவர் பட்டாபிஷேகம் நடக்கும் பெரும் கொண்டாட்டம் நடக்க இருப்பதாலும் எங்கும் பெரும் மகிழ்வும், உணவும் இனிப்புகளும், புத்தாடைகளும் ஆரவாரமும் ஆட்டம் பாட்டமுமாக அந்த அழகிய அயோத்தி ஜொலித்துக் கொண்டிருந்தது.

ஒருபக்கம் மாபெரும் ரிஷிகள் யாக சாலை அமைத்து மந்திரங்களை முழங்கி கொண் டிருந்தார்கள், குடம் குடமாக நெய்யும் இதர பொருட்களும் வண்டி வண்டியாய் கொண்டுவந்து அடுக்கபட்டிருந்தது, யாக சாலை பல மைல் அளவுக்கு சராயு நதிகரையில் அமர்ந்திருந்தது

அந்த யாகசாலையின் புகை வானில் கருமேகம் போல் திரண்டிருந்தது

இராமபிரானுக்கு எதிரிகளே இல்லை என்பதால் காவலர்களும் வீரர்களும் கூட கொண்டாட்டத்தில் இருந்தனர், திரும்பும் இடமெல்லாம் ஆனந்தமும் மகிழ்வும் நிறைவுமே சரயு நதி வெள்ளம் போல் ஓடிக்கொண்டிருந்தது.

இராமபிரானின் முடிசூட்டு விழாவுக்கு எல்லா ரிஷிகள், மகான்கள் என வந்திருந்தனர். எல்லா மன்னர்களும் வந்திருந்தார்கள், சுக்ரீவனும் விபீஷணனும் முதல் ஆளாக வந்திருந்தனர்.

குகன் முதல் எல்லோரும் வந்திருந்தார்கள்.

விபீஷணன் அந்த அனந்த பத்மநாபன் சிலையினை வைத்தகண் எடுக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான்.

எல்லோரும் கொண்டாட்டத்தில் இருக்க அனுமனின் கண்கள் மட்டும் ஒருத்தியினை தேடின, எங்குத் தேடினாலும் காண முடியாத



அவளைப் பற்றி மெல்ல பரதனிடம் கேட்டான்.

"பரதா, நம் அன்னை கைகேயி எங்கே? நான் அவரை சந்திக்க வேண்டும்"

யாரும் அதுவரை கேட்காத கேள்வியினைக் கேட்டதும் பரதன் நெற்றி சுருக்கினான். பின், சொன்னான் "அனுமா நீ அண்ணனுக்கு உத்தம மான சீடன், சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவன் அதனால் எங்களில் ஒருவன் உன்னிடம் நான் எல்லாம் சொல்லமுடியும்.

என் அன்னையினை நான் பார்த்தே பதினான்கு வருடமாகின்றது, அவர் அந்த அறையினை விட்டு வருவதில்லை, ஊரும் உலகும் அவரைத் தூற்றுவதாலும், இராமனை காட்டுக்கு விரட்டி யவர் என மக்கள் தூற்றியதாலும் அவர் முடங்கிக் கிடக்கின்றார்.

அவர் உருவமே மாறிவிட்டதாக சேவகர்கள் சொல்கின்றார்கள். நான் அவர்களை சந்திக்க முயன்றாலும் அவர்கள் அனுமதிப்பதில்லை. யாரையும் பார்ப்பதில்லை. ஆனானப்பட்ட ரிஷிகள் வந்தாலும் கதவை திறப்பதில்லை, இப்போது இராமன் வந்துவிட்ட பின்பும் அந்த அறை பூட்டியேதான் கிடக்கின்றது.

அதோ அந்த மாளிகையில்தான் இருக்கின்றார், நான் அவர் சொன்னபடி முடிசூடவில்லை எனும் கோபம் இருக்கலாம். எங்களுக்குள் பேச்சு ஏதுமில்லை, நீ வேண்டுமானால் சென்று பார்" என்றான்.

அனுமன் அந்த மாளிகைக்கு சென்றான். அது வெள்ளையடிக்கப்படாமல் பராமரிக்கப்படாமல் சிதலமடையத் தொடங்கியிருந்தது, செடி கொடி யெல்லாம் படர்ந்து காரை பெயர்ந்திருந்தது அனுமன் எல்லாம் கவனித்துக் கொண்டேவந்தான்.

அங்கிருந்த பணிப்பெண்கள் அனுமனிடம் என்ன வேண்டும் என்றார்கள், "அனுமன்வந்திருக் கின்றேன், அன்னையினை காண வந்திருக் கின்றேன் என சொல்லுங்கள்" என்றான்.

அந்த அறையில் கைகேயி வெறித்த பார்வை யுடன் அமர்ந்திருந்தாள், கிட்டதட்ட பேச்சு என்ப தையே மறந்த நிலையில் இருந்தாள், யாரிடமும் அவள் பேச விரும்பவில்லை, பாலைநிலத்து மரம் போல் தனித்து இருந்தாள்

அவளிடம் செய்தி சொல்லப்பட்டதும் அசையாத அவள் கண்கள் அசைந்தன.

"அனுமனா.. என்னைத் தேடியா?" என மெல்லிய குரலில் கேட்டாள், "ஆம்" என்றனர் பெண்கள்.

"அவனுக்கு ஆசனமிட்டு அமரச் சொல்லுங் கள், உண்பதற்கு ஏதும் கொடுங்கள, நான் வருகின்றேன்" என்றவள் தன் கோலத்தை கண் ணாடியில் பார்த்தாள்.



கண்ணாடி தூசி அடைந்துக் கிடந்தது, அது வரை அதை காணும் அவசியம் அவளுக்கு வர வில்லை.

கொஞ்சம் துடைத்து தன்னை பார்த்தவள் அஞ்சினாள், நன்றாக உற்று பார்த்தாள், பின் விரக்தியாய் சிரித்தாள், தலையினை ஆட்டிக் கொண்டாள்.

ஒரு சால்வையினை எடுத்து தன் மேல் போர்த்திக் கொண்டு தளர்வாய் வந்து அமர்ந்தாள், அனுமன் அவளை கண்டதும் கலங்கிப் போனான்.

மிக மெலிந்த உருவம், ஒட்டிவிட்ட கன்னங்கள், நரைத்த தலைமுடி அதுவும் எண்ணெயோ அலங்காரமோ இல்லாமல் சடை விழுந்த முடி, ஆனால் பார்வையில் ஒரு வைராக்கியம் என அவள் அமர்ந்திருந்தாள். அயோத்தியி அரசகுல பெண் எனும் அடையாளம் ஏதும் அவளுக்கு இல்லை

அவள் பேச தொடங்கினாள்.

"நீ தான் அனுமனா?

ஆம் தாயே

"என்ன விஷயமாக வந்தாய்?" கேட்டவள் முகத்தில் எதுவுமே உணர்ச்சியில்லை. ஆனால், அவள் கண்கள் தன்னை தீர்க்கமாகப் பார்த்து திரும்பியதை அனுமன் கவனித்தான்.

"இராமனை பெற்று அயோத்திக்கு தந்த தாய் கௌசல்யா, ஆனால் உலகுக்கு தந்த தாய் நீங்களல்லவா? நீங்கள் இல்லாவிட்டால் இராமன் எனும் மகா உத்தமன் எங்களுக்கெல்லாம் கிடைத் திருப்பானா? அப்படி ஒருவனை உலகுக்குத் தந்த தாயினை சந்தித்து வாழ்த்துப் பெற வந்தேன்"

கைகேயி அவனை கண்கள் விரிய பார்த்தாள், உற்றுப் பார்த்தாள், பெருமூச்சு ஒன்றை இட்டவள் கொஞ்ச நேரம் வானம் பார்த்தாள், கண்களை மூடிகொண்டாள், பின் மெல்ல அனுமனை கண் டாள்.

அவள் முகத்தில் மெல்லிய புன்னகை அரும் பிற்று, அவனை அருகில் அழைத்தாள்.

தாயே என ஓடிச் சென்று அவள் காலடியில் அமர்ந்துக் கொண்டான் அனுமன், அவன் தலை யினை தொட்டவாறே புன்னகைத்தாள்.

பதினான்கு ஆண்டு கழிந்து அதுதான் அவள் முதல் மெல்லிய புன்னகையாய் இருந்தது.

அனுமன் மெல்ல கேட்டான், "தாயே, எல்லா ராலும் எல்லோரையும் புரிந்துகொள்ள முடியாது, அது அவசியமும் அல்ல. ஊரும் உலகமும் சொல் வதை எல்லாம் நம்புவதும் மடமை.

யாரும் என்னமும் சொல்லட்டும், நீங்கள் இல்லாவிட்டால் எங்களுக்கு இராமன் இல்லை, அதனால் உங்களை காண விழைந்தேன், உங்களைப் பார்த்தால் ஒரு பராக்கிரம சக்தியின்

வடிவமாகத்தான் தோன்றுகின்றது, நீங்கள் மகா சக்தி என்பதை நம்புகின்றேன்.

எனக்கு கிஷ்கிந்தாவுக்கு வந்த இராமனை தெரியும், வாலி இராவணன் என வதம் செய்த இராமனை தெரியும் ஆனால் அயோத்தியில் இருந்த இராமனை தெரியாது.

எங்களுக்கு அவனைத் தந்தவர் எனும் வகையில் நீங்கள் அவனைப்பற்றி சொன்னால் காதார கேட்டுகொள்வேன், அவன் புகழை அவன் வாழ்வை எல்லோர் சொல்வதையும் விட நீங்கள் சொன்னால் மிகவும் சரியாக இருக்கும் அல்லவா?"

மெல்ல சிரித்தாள் கைகேயி, அவள் முன் பணிந்திருந்த அனுமனை நோக்கி சொன்னாள்.

"வேதங்களை முழுக்க அறிந்தவனே, நீ என் ஐந்தாம் மகன் என்பதால் உன்னிடம் எதையும் என்னால் மறைக்க முடியாது, நீ அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் உண்டு.

நான் கேகய நாட்டு மகள் அஸ்வபதியின் ஒரே மகள், அதுவும் சாதாரணமாகப் பிறந்தவள் அல்ல. என் தந்தை மகா மேதை, எல்லா வேதமும் ஜாதகமும் ஆகமவிதிகளும் யாகமுறைகளும் இன்னும் பலவும் கற்றுத் தேர்ந்தவர், எத்தனையோ பேரின் கர்ம வினை தீர வழிகாட்டியவர், ஒருவரின் எல்லா காலத்தையும் கணிக்கும் ஆற்றல் அவருடையது.

நெடுநாள் வாரிசு இல்லாத அவருக்கு பெரும் யாகத்தில் சரஸ்வதியின் அம்சமாக பிறந்தவள் நான், அதனால் கூர்மதி இயல்பாக வந்தது. அவர் தனக்குத் தெரிந்த எல்லாக் கலைகளையும் எனக்கு கற்று தந்து ஜாதகம் முதல் எல்லாமும் கற்றுத் தந்தார், எல்லாக் கலைகளும் எனக்கு பிரசித்தியாயின.

என் தகப்பனிடம் எல்லாரும் தங்கள் குறை களை கேட்க வருவார்கள், அப்படித்தான் இந்த தசரதனும் வந்தார், அவரின் பெரும் சோகம் புத்திரன் இல்லை என்பது.

அவர் சூரிய வம்சத்தில் வந்தவர், சர்வ லட்ச ணமும் சிறப்பான ஜாதகமும் கொண்ட பெண் வந்தால்தான் அவனுக்கு புத்திர பாக்கியம் வரும் என்பது விதி.

அவனுக்கு என் ஜாதகம் தெரிய வந்தபோது என்னை மணம் செய்து கொள்ள விரும்பினார்.

ஆனால், என் தந்தைக்கு வருத்தம் இருந்தது. காரணம், என்னை பட்டமகிஷியாக இருத்தி தன் பேரனை அரசனாக்கத்தான் விருப்பம் இருந்தது,



அதனால் திருமணத்துக்கு மறுத்தார்.

அப்போதே என் மகனைத்தான் அரசனாக்கு வேன் என்னை ராணியாக்குவேன் என சொல் லித்தான் மணமுடித்தார் தசரதன்.

அனுமனே, புத்திரனை பிரிந்து தசரதன் வாட வேண்டும் என்பது அவர் மகன்களை பெறும் முன்பே கிடைத்த சாபம், அப்போது மகன்கள் இல்லா தசரதன் சாபம் பலிக்க மகன் வேண்டுமே, அப்படியாவது மகன் வரட்டும் என்றுதான் அவர் போக்கில் இருந்தார்.

இந்த சாபம் எனக்கு முதலில் தெரியாது, மணமான பின்புதான் அறியப்பெற்றேன்.

நான் அவருக்கு மனைவி மட்டுமல்ல தோழி, ஆலோசகர், அவனின் காரியதரிசி, ஜோதிடர் என எல்லாமே நான், மூன்று மனைவியரில் எனக்கு தனி இடம் வைத்திருந்தார்.

போருக்கு செல்லும் போது என்னைத்தான் அழைத்துச் செல்வார், சிறுவயதிலே என் அரண்மனையில் பெரிய காட்டுப் பூனை வந்து சேவகர்களே அஞ்சியபோது, சிறிய கத்தியால் அதை துணிச்சலாக கொன்றவள் நான், அந்த தைரியத்தை கண்டுதான் என் தந்தை போர் பயிற்சியெல்லாம் அளித்தார்.

தசரதனுடன் சம்பாசுரனை அழிக்கும் போருக்குச் சென்றேன். தசரதன் என்னை சாரதியாக்கினார். காராணம், எனை மீறி அவரைத் தொடமுடியாது எனும் நம்பிக்கை.

போரில் அசுரன் அவரின் தேர் அச்சாணியினை குறிவைத்தபோது நான் என் கட்டை விரலை



அச்சாணிக்கு கொடுத்து அவர் உயிரை காத்தேன். அந்தப் போரில் வென்றபின்புதான் எனக்கு இருவரங்கள் கேட்கலாம் என மகிழ்வுடன் தந்தார்.

அந்த வரத்தை கேட்கும் அவசியம் எனக்கு எப்போதும் வரவில்லை.

அதன்பின் தசரதன் புத்திரருக்கான யாகம் செய்தபின் நான்கு மகன்கள் இங்கு வந்தார்கள், நான் அவர்களை என் பிள்ளைகளாகத்தான் வளர்த்தேன், வம்சம் வம்சமாக வந்த போர் கலையினை நானே நால்வருக்கும் தொடக்கத்தில் கற்றுக்கொடுத்தேன்.

இராமன் அதில் சிறந்து விளங்கினான், என் மகன்களில் அவனையே சிறந்தவனாக கருதினேன், எல்லோருக்கும் விருப்பமான இராமன் எனக்கு மூத்த மகன் எனும் கர்வம் இருந்தது, அவனுக்கு முதலில் வில் பிடித்து கொடுத்தது நானேதான்.

இராமன் ஒவ்வொரு வெற்றியினை பெற்று வரும் போதும் என்னிடம்தான் முதலில் வருவான், என்னைத் தாயாக அல்ல குருவாக கொண்டாடினான்.

ஆனால், தசரதன் அவனுக்கு பட்டாபிஷேகம் என முடிவெடுத்தபோதுதான் திகைத்துவிட்டேன். காரணம், எல்லோருடைய ஜாதகம், சாபம், கர்மவினை என எல்லாம் அறிந்தவள் என்பதால் துடித்துப்போனேன்

என்னிடம் நல்ல நேரம் குறிக்கத்தான் தசரதன் வந்தாரே தவிர பட்டாபிஷேகமென்பது அவரின் முடிவு, மூத்த மகனுக்கு அரசுரிமை என்பது இயல்பானது என்பதால் அவர் அங்கே ஆலோசிக்க ஒன்றுமில்லை என கருதியிருக்கலாம்

சொன்னவள் குரல் மெல்ல உடைய தொடங்கிற்று, அனுமன் அவளை கவனித்துக் கொண்டே இருந்தான்.

"அனுமனே, ஆனால் அந்த சாபம் நிச்சயம் பலிக்கும், ராமன் முடிசூட்டிக் கொண்டால் அயோத்தியில் தங்கிவிடுவான், அப்படி அவனும் இங்கு இருக்கும் போது தசரதனின் சாபம் பலிக்கும் என்றால்.....

ஐயோ அனுமனே உன்னால் தாங்கமுடியுமா, என்னால் முடியுமா?

தசரதன் மகனைப் பிரிந்து அழுது சாகவேண்டும் என்பது விதி, இராமனுக்கோ பதினான்கு வருடம் அவன் நேரம் சரியில்லை தலையில் கிரீடம் ஏறினால் உயிருக்கு ஆபத்து என்பது ஜாதகம், அதோடு கூட பெரிய கண்டம் அவனுக்கு இருந்தது.

கணவனா? மகனா? என நான் அழுதுக் கொண்டிருந்தேன், தசரதன் இராமனுக்கு படடாபிஷேகம் எனச் சொன்னபோது உள்ளூர துடித்துக் கலங்கிப் போனேன்.

ஒரு பக்கம் கணவன், ஒரு பக்கம் மகன், இந்த குடும்பத்தை காக்கும் பொறுப்போ என்னுடையது.

அனுமனே, அப்போதுதான் மந்தாரை வந்தாள். அவள்தான் இராமன் அயோத்தியில் இருந்து சூரிய குல மன்னர்களை போல சராசரி மன்னனாக



வாழ்ந்து முடியவேண்டியவன் அல்ல, அவன் உலக ஜோதி, அவன் பெருமை உலகெல்லாம தெரியவேண்டும் என்ற நோக்கில்தான் என்னிடம் பேசினாள்.

அப்படித்தான் நான் தசரதனிடம் பெற்ற இருவரங்களை அவள் நினைவுப்படுத்தினாள்.

எனக்கு வேறு வழி தெரியவில்லை, இந்தக் குடும்பம் என்னுடையது, இதைக் காக்கும் பெரும் பொறுப்பு என்னுடையது.

தசரதன் சாபம் நிறைவேறும் கண்டிப்பாக நிறைவேறும் எனும்போது இராமன் இங்கிருத்தல் கூடாது, அதுவும் பதினான்கு வருடம் இருக்கவே கூடாது.

அதனாலே மனதை கல்லாக்கி அந்த வரம் கேட்டேன்.

அனுமனே நான் அந்த வரத்தை அவன் ஆயுளுக்கும் கேட்டிருக்கலாம், இராமன் தன் ஆயுள் வரை அயோத்திக்கு வரக்கூடாது எனக் கேட்டிருக்கலாம், செய்தேனா?

அவன் கஷ்டகாலம் முடியுமட்டும் போதும் என்றுதான் பதினான்கு ஆண்டுகள் எனச் சொன்னேன்.

அதுவும் இந்த நாட்டின் மன்னனுக்கு கிரீடம் சுமப்பவனுக்கு ஆபத்து என்பதால் என் மகன் பரதனையே பலிகொடுக்கவும் துணிந்தேன்.



அனுமனே, இராமனை ஒரு நொடி பிரியமுடியாமல் வளர்த்தவள் நான், நான் அவனை அப்படி பதினான்கு வருடம் பிரிய நினைப்பேனா? ஆனால் விதியினை வெல்ல நான் யார்?

எவ்வளவு அழுதிருப்பேன்? எவ்வளவு கலங்கியிருப்பேன்?

என்னால்தான் இராமன் பிரிந்தான் என நாடெங்கும் பேசினார்கள், இன்னும் என்ன வெல்லாமோ சொல்லி தூற்றினார்கள், எனக்கு நல்ல பெயர் முக்கியமல்ல இராமன் முக்கியம், என் கண்மணி முக்கியம், அவன் உயிர் முக்கியம்.

நான் அந்தப் பழியினை சுமந்தேன், என் மகன் கிரீடம் ஏற்க மறுத்தான், இலட்சுமணன் மனைவி ஊர்மிளை தவவாழ்க்கை வாழ்ந்தாள்.

அனுமனே சீதையாவது இராமனுடன் வந்தாள். ஆனால் ஊர்மிளை?

இங்கு எல்லாமே தியாகம் அனுமா, இராம னுக்காக நான் தியாகம் செய்தேன், பரதன் செய்தான், இலட்சுமணன் மனைவி செய்தாள், இதுதான் இராமன்மேல் நாங்கள் கொண்டிருந்த பேரன்பு.

எனக்கு அச்சமெல்லாம் அவன் வாழ்வில் வரும் கண்டத்தினை பற்றி இருந்தது, நான் இந்தப் பதினான்கு



ஆண்டுகள் தவமிருந்தேன், ஒருவேளைதான் உண்டேன், பெரும் விரத மிருந்தேன்.

அப்படியும் அவனுக்கு இராவணனுடன் யுத்தத்தில் ஆபத்து வந்தது, அவன் மூர்ச்சையான போது நீ தான் அவனை காத்தாய், என் பிரார்த்தனையெல்லாம் உன் உருவில் வந்தது.

அனுமனே, நான் ஒன்றும் அறியாதவள் அல்ல, ஒவ்வொரு தகவலையும் யோக நிலையில் பெற்றுதான் வந்தேன், இராவணனை நானே அழித்திருப்பேன், ஏன் சீதையே தொலைத்திருப்பாள், அவ்வளவு ஏன் உன்னாலே அவனை நொறுக்கியிருக்க முடியும்.

ஆனால், விதித்தது நடக்கும்படி இராமனால் அவன் அழிந்தான், அந்நேரம் அவனுக்கு இருந்த ஆபத்தும் உன்னால் நீங்கிற்று.

இனி அவனுக்கு ஆபத்தில்லை அவனும் நாட்டுக்கு திரும்பிவிட்டான், இப்போதும் அவன் என்னை அன்னை எனக் கொண்டாடுகின்றான், அவன் மனம் நான் அறிவேன்.

ஆனால், சபை அறிய என்னால் வரமுடியாது, வந்தால் மக்களும் ஆட்களும் ஏதேனும் பேசுவார்கள். என்னை புரிந்துகொள்ள யாராலும் முடியாது. அதுபற்றி எனக்கு கவலையுமில்லை.

நான் யாரிடமும் எதுவும் பேசவுமில்லை, என் கடமையினை நான் செய்தேன், இன்று எல்லோரும் கொண்டாடும் இராமனை காப்பாற்றிக் கொடுத்தேன், இதோ என் கண்மணி பட்டாபிஷேகம் காணப் போகின்றான்.

இதற்கு என்னைவிட மகிழ்ச்சி அடையும் ஒருவரை நீ காணமுடியாது, அங்கு வந்து இராமனுக்கு அன்னை நான் என்பதில் அல்ல மகிழ்ச்சி. அயோத்தி மன்னனாக ஆபத்தில் சிக்கியிருக்க வேண்டியவனை காத்து அவன் ஆபத்துக்காலம் நீக்கி அரசனாக்க வழி செய்தோம் என மனம் நிறைவு கொள்கின்றதல்லாவா அது மகிழ்ச்சி.

"கைகேயி நீ இந்த குடும்பத்தின் காவல்" என என் கணவர் சொன்னதை நிரூபித்துவிட்டேன் அல்லவா அது மகிழ்ச்சி.

இஷ்வாகு வாரிசாக இங்கேயே மன்னனாக இருந்து முடிந்திருக்கவேண்டிய இராமனைஉலகச் சக்கரவர்த்தியாக அதுவும் உன்னைக் போல உண்மையான பக்தனை பெற்றவனாக அரியணையில் அமர்த்தினேனே அதுதான் நிறைவு.

இதையெல்லாம் சொல்லி சொல்லி காட்ட அவசியமில்லை, எல்லோர் முன் சொல்லும் காரணமுமில்லை, என் மனம் ராமன் அறிவான், அவன் மனம் நான் அறிவேன். அனும்னே நீ உத்தமன், இராமனுக்கு முழு பலமும் காவலுமாய் இருப்பவன், அவன் உயிரை அதாவது என் உயிரை காலத்துத் தந்தவன், அதனால் உன்னிடம் மட்டும் மனம் திறந்தேன்.

பட்டாபிஷேகம் நன்றாய் நடக்கும், நான் அதை எங்கிருந்தேனும் பார்க்காமல் இருக்கமாட்டேன், என் கடமை முழுமையாகும் அந்த பூரண நொடி முக்கியமானது" என்றாள்.

பெரும் காரியத்தை சாதித்த நிறைவு அவள் முகத்தில் இருந்தது, தாயே நீ எனக்கும் இனி அன்னை என அவள் பாதம் பற்றி அழுது கொண்டிருந்தான் அனுமன்.

யார் எதை தொலைத்தாலும் கண்டுபிடித்து கொடுப்பவனே, என் இராமனை என்னிடம் மீட்டுக் கொடுத்தாய், என் மனதின் ஆழத்தினையும் கண்டறிந்து கொடுத்தாய். எல்லா உயிர்களுக்கும் பூமியில் என் மகனாய் நீயும் காவல் இருப்பாய், யார் எதைத் தொலைத்தாலும் கண்டறிந்து கொடுப்பாய், என் தவப்பலனை உனக்கும் தருகின்றேன் எனக் கொடுத்தாள் கைகேயி.

அனுமன் அப்போது ஆயிரம் அனுமன் பலத்தை முழுக்க பெற்றவனாய் சொன்னான், தாயே என்னோடும் இராமனனோடும் எக்காலமும் நீயும் மக்களால் கொண்டாடப்படுவாய் எல்லாம் உன்னாலேதான் உலகுக்கு நலமாய் தர்மமாய் கிடைத்தது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வார்கள். கலக்கம் வேண்டாம்.

இதுவரை கலங்காத நான் இனிமேலா கலங்க போகின்றேன் எனச் சொல்லி புன்னகைத்தாள் கைகேயி. அந்த முகத்தில் பராசக்தி வந்துசென்றதை, ராம அவதாரத்தை இயக்கிய அந்த மகாசக்தியினை கண்டு மீண்டும் விழுந்து வணங்கினான் அனுமன்சூரிய குலம் என்பது பெயரளவில் அல்ல, அங்கே ஒவ்வொரு பாத்திரமும் உள்ளே எரிந்து தன்னையே தீபமாக எரித்துத்தான் தரமத்தின் ஒளியினை கொடுக்கின்றது என்பதை முழுக்க மனதால் புரிந்த நிறைவில் கண்களில் நீர் ததும்ப நின்றான் அனுமன்

- A s Govinda rajan
Kodambakkam, Chennai 600024

அருள்தரும்

# தெய்வம்

என்றும் நம் இல்லங்களில்

தமிழ் மாதமிருமுறை இதழ்

மாதம் தோறும்
இரு இதழ்களாக
வெளிவரும்

## அருள்தரும் தெய்வம்

இதழின் சந்தாதாரர்
ஆகுங்கள்

- 1 வருட சந்தா ரூ.399
- 2 வருட சந்தா ரூ.699
- 3 வருட சந்தா ரூ.999

## பரிசை அள்ளுங்கள்?

நிர்வாக அலுவலகம்

## PADMA MEDIA HOUSE

No.116, EH Road, Gandhi Nagar ,
Tondiarpet, Chennai-600081

சந்தா செலுத்த அருகில் உள்ள க்யூஆர் கோட் ஸ்கேன் செய்யவும் மேலும்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு சந்தாதாரர் ஆகுங்கள்

PhonePe
ACCEPTED HERE
Scan & Pay Using PhonePe App
MS PADMA MEDIA HOUSE

சந்தா மற்றும் அனைத்து விபரங்களுக்கும்

அலைபேசி எண்: 9337501889

அன்றாடச் செய்திகளை துல்லியமாக தரும்

# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


இந்தியா எனது மூன்றாவது ஆட்சிக்காலத்தில்
டாப்-3 பொருளாதாரங்களில் ஒன்றாக இருக்கும்
திருச்சி அரசு மருத்துவமனையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு
நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்திற்கு மத்திய அரசு ஏற்பு
8122664699


பழங்குடியின பெண்களை நிர்வாணம்: வெடித்த போராட்டம்
8122664699
9445534085/ 8610092700




முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டி நிறைவு
8122664699

எந்தவித மறை முக கட்டணமும் இல்லை

சந்தா, சப்ஸ்கிரிப்ஷன் இல்லை,

உங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எங்களுக்கு தெரியபடுத்துங்கள், நமது இ–பேப்பரை படித்து பயன்பெறுங்கள்,

**Whatsup no.8122664699**

TamilnaduEpaper.com